# மாணிக்கவாசகர்.

இஃது

கோயமுத்தூர்

தமிழ்ப்பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ

ச. திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு

மகாமகோபாத்யாய டாக்டர்

உ. வே. சாமிநாத[illegible] நாற் [illegible]ஷயம்

[illegible] 20.

[illegible]

க. சுப்பிரமணிய முதலியாரால்

சென்னை:

வே. நா. ஜுபிலி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1900

*Registered Copy Right.*

விலை அணா பத்து.

# PREFACE.

This is a lecture delivered by my revered teacher, the author, to the Madras Presidency College Tamil Sangam, on the occasion of its anniversary on the 13th December 1899. At the request of Mr. T. Ramakrishna Pillai, B A, the South Indian poet, who presided on the occasion and also according to the wishes of many other gentlemen, the author has written it out I publish it hoping that it will be useful to the reading public.

COIMBATORE, *May 1900.* — C. K. SUBRAMANIAM

V. R. Natesan

18 2.03

# மாணிக்கவாசகர்.

இம்மாணிக்கவாசகர் சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவர். இக்காலத்தில் கிறிஸ்துமத ஸ்தாபனாசாரியராகிய கிறிஸ்து இன்னார் என்பதும் இன்னகாலத்தில் இருந்தார் என்பதும் இன்னின்ன அற்புதங்களைச் செய்தார் என்பதும் அவருடைய உயிர் வாழ்க்கைத் திறம் இப்படிப்பட்டதென்பதும் அவரைச்சார்ந்தொழுகிய அடியவர்கள் இன்னின்னார் என்பதும் அக்கிறிஸ்துமதச் சிறுவர்களுக்கு மட்டுமல்ல, நம்மதச் சிறுவர்களுக்குந் தெரியும். இம்மாணிக்கவாசகர் இன்னார் என்பதும் அவர் வாழ்க்கைத்திறம் இன்னதென்பதும் இன்னின்ன நூல் அருளினார் என்பதும் நம்முள் பெரியோர்களாக இருப்பவருள்ளும் பலர்க்குத்தெரியாது. இதற்குக்காரணம் என்ன? அம்மதஸ்தர்கள் தக்க சிரமம் எடுத்துக்கொண்டு பரோபகாரார்த்தமாக உழைத்து வருவதுபோல நம்முடைய மடாதிபதிகளும் பிறரும் செய்யாமையேதான் என்று தோன்றுகின்றது.

நம் சமயநூல்கள் எல்லாருக்குந் தெரியும்படியான எளிய நடையில் அமைக்கப்படாமையும் ஒரு காரணமென நினைக்கின்றேன். இதனால் நம் சமயநூல்களை இயற்றினார்மீது குறைகூற வந்தேனல்லேன். அவர்கள் அந்நாட்டகுதிக்கேற்ப இயற்றினார்கள். இக்காலத்திய தகுதிக்கேற்ப இயற்றிக்கொள்ளுதல்

நம்கடமை எனபதே என கருதது. திரிபுரமெரி
த்த விரிசடைக்கடவுள்பால் தீந்தமிழ் தேர்ந்துணர்ந்த
அகத்தியமுனிவர் இயற்றிய பேரகத்தியம், இடைச்
சங்கத்தார் காலத்திலேயே கற்பார் அரிதாகப்போ
யின்மைகண்டு அவர் மாணாக்கர் பன்னிருவருட்சிற
ந்த திரணதூமாக்கினியார், அகத்தியத்தின் வழித்
தாகச்சுருக்கித் தொல்காப்பியம் இயற்றினார். பிற
காலத்தவர்களாகிய பவணந்தியாதியோர் அத்தொல
காப்பியமும் கற்றற் கரிதெனக்கண்டு பின்னும் சுருக்
கியும் விளக்கியும் நன்னூல் முதலியன இயற்றினார்
கள். ஆதலின் பெரியோர்களுக்கும் காலத்திற்குத்
தக்க கோலங்கொள்ள வேண்டுமெனபதே கருத்தெ
னறு எண்ணுகினறேன்

இனி ஒரு பாஷையின் நூல்கள், கற்றுவல்
லோர்க்குமட்டும் அறிந்து பொருள்படக்கூடிய காவிய
நடையிற் கட்டுண்டிராமல் எல்லார்க்கும் எளிதிற்
புலப்படக் கூடிய வசனநடையில் வழங்கத்தொடங்கி
னால் அதுதான் அப்பாஷையின் விருத்திக்குத்தொ
டக்கம் எனக் கருதுகின்றேன். ஆங்கிலேயத்தில்
ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய மகாகவிகளால் இயற்
றப்பட்ட சிறந்த நாடகங்களும், காவியங்களும் அழக
ளித்திருந்தபோதிலும் வசனநூல்கள் வழங்கத்தொ
டங்கியபின்தான் அம்மொழிக்கும் அதைப் பேசுப
வர்கட்கும் ஆக்கியம் அதிகரித்தது என்பதை யார்
அறியார்கள். அவ்வாங்கிலேய நூலாசிரியர்கள் தங்க
ளிடத்திலிருந்தவைகளை வசனத்தில் இசைத்து வழங்

கிபதுமன்றி அர்த்தசாஸ்திரம், பூகோள சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம் முதலிய பலவேறு சாஸ்திரங்களையும் பலவேறு மொழிகளிலுமிருந்து தம்மொழியிற் பெயர்த்து எளிய நடையிற் சிறக்கவியற்றினர். அதனால் அம்மொழி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சொற்ப காலத்துள் மேன்மையான பதவியை யடைந்துவிட்டது. நம்முடைய தீந்தமிழ்மொழியோ என்றால் "அன்று கண்டமேனிக் கழிவில்லை" என்றபடி பழைய காவிய நிலையே கதியாகப் படுத்துக்கிடக்கின்றது. நாம் நம்முடைய பாஷையை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமானால் நம்மிடத்துள்ளவைகளை, எல்லார்க்கும் தெரியும்படியான எளிய நடையில் எழுதவேண்டும். இல்லாதவைகளை அயல் மொழிகளிலிருந்து எளிய நடையில் மொழிபெயர்க்க வேண்டும். நாம் நம்மிடத்தில் இல்லாதவைகளுக்காக இப்போது பலமொழிகளுட் புகுந்தலைய வேண்டுவதில்லை. எல்லா விஷயங்களும் ஆங்கிலேயத்தில் அடங்கியிருக்கின்றன. அது, பலவேறு விஷயங்களையும் பலவேறிடங்களிலுமிருந்து தேடிக் கொண்டுபோய் ஒன்றைப்பத்தாகவும் பத்தை நூறாகவும் விருத்திசெய்து வைத்திருக்கின்றது. நாம் அதனிடத்தே இருந்து எல்லா விஷயங்களையும் எளிதில் அடையலாம்.

இனி ஒரு சாரார் "நாம் தேச சரித்திரங்களையும் சாஸ்திரங்களையும் தமிழில் மொழிபெயர்க்கலாமென்றால் சில விஷயங்களையறிவிக்க ஏற்றமொழிகள் கண்டுபிடிப்பது அதிக கஷ்டமாயிருக்கின்றது" என்கின்றா

கள். ஆனால் அவர்கள் இவ்விஷயத்தைப்புங்கூட இவ்வாறு தமிழாகச்சொல்லுவதில்லை "நாம் History களையும் Science களையும் Tamil languageல translate பண்ணலாமென்றால் சில things களை express பண்ணுகிறதற்கு technical terms களை find out பண்ணுகிறது பெரிய difficulty ஆக இருக்கிறது" என்றுதான் சொல்லுவார்கள். இவ்விரத்தினங்கள் இழைக்கத்தக்க பொன்னாகவாயினும் இருக்கும் பாக்கியம் நம் தமிழ் பெற்றதே என்பதற்கு மகிழவேண்டும். இவர்கள் இவ்வாறு History முதலிய ஆங்கிலேய மொழிகளை உடன்கலந்து இடாப்படுகிறது, தமிழில் 'தேசசரித்திரம்' முதலிய மொழிகள் வழங்காமையினாலா? அல்ல; இவர்களது அப்பியாசமின்மையாலேயே என்பது வெளிப்படைதானே. ஆய்ந்து நோக்கினால் அனேக விஷயங்களை எளிதாக வெளிப்படுத்த, வேண்டிய மொழிகள் அகப்படும். இல்லாதவைகளுக்குப் புதிய பதங்களை யமைக்கவேண்டும். இயலாதவைகளுக்கு அன்னியபாஷையின் மொழியையே அமைக்கவேண்டும். ஆதியில் ஆங்கிலேயம் அன்னியபாஷைகளை யடுத்துறவாடி அவற்றின் சொற்களையும் பொருளையும் யாசித்துப் பெற்றுத்தானே இப்போது தனக்கிணையில்லாப்பாஷையென விளங்குகின்றது அவ்வாறு பெற்ற அன்னியமொழிகளுள் அனேகத்தை ஆங்கிலேயர் தன்மயமாக்கிக்கொண்டாலும் எத்தனை மொழிகள் அன்னிய பாஷைகளில் உள்ளபடியே வழங்குகின்றன. *Plus, Integer, Petitio principii,* முதலிய சாத்திர பரிபாஷைகளைப்பாருங்கள். ஆதலின் அப்

பாஷையின் முன்மாதிரியைப் பின்பற்றிச் சென்றால் ஒழிய நம்பாஷை முன்னுக்குவராது.

இப்போது இருப்பவற்றுட் பழய இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் "ஆவோடல்லது யகர முதலாது" என்று கூறப்பட்டிருக்கின்றது. யகரமெய் ஆகாரவுயிர் ஒன்றுடனேயன்றிப் பிற உயிரோடு கூடி மொழிக்கு முதலில்வராது என்பது இதன் பொருள். பிற்காலத்தவராகிய பவணந்தியார் "அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ யம முதல்" எனச் சூத்திரம் செய்தார். யகரமெய் அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்ற ஆறுயிரோடுங்கூடி மொழிக்கு முதலில் வரும் என்பது இதன் பொருள். முன்னேயவராகிய தொல்காப்பியர் யகரமெய் ஆ என்ற ஒருயிரோடுமட்டும் கூடி மொழிக்கு முதலில் வருமென்றுரைத்திருக்கப் பவணந்தியார், அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்பவைகளில் எந்த உயிரோடும் கூடி மொழிக்கு முதலில் வரலாம் என்று ஏன் கூறினார்? தமிழில் யாறு, யாடு, யானை, யாவன், யாங்ஙனம் என்பவையே தொல்காப்பியர் காலத்தில் வழங்கிவந்திருக்கப் பிற்காலத்தில் யவனர், யுகம், யூகம், யௌவனம் முதலியவை அன்னிய பாஷையிலிருந்து வந்து கலந்து விட்டமையினாலேயே யல்லவா? பிற்காலத்தில் எவ்வளவு ஆசிரியர்கள் வேதாந்த பரிபாஷைகளையும், தர்க்க பரிபாஷைகளையும் அன்னிய பாஷையினின்றெடுத்து வழங்கியிருக்கின்றார்கள். திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீ சிவஞானயோகிகள் 'மேற்கோள்' முதலிய எவ்வளவு பதங்களைப்புதிதாக அமைத்

றுந தமிழுலகுக குபகாரம பண்ணியிருககின்றா கள. ஆதலின அன்னிய பாஷைகளிலிருநது அருமையானவைகளை மொழிபெயாததலும அவசியமான இடஙகளில புதிதாகபபதஙகளை அமைததுசசோததலும, இயலாதபோது அவ்வனனிய பாஷை மொழிகளையே அமைத்தலும நமமுனனோாகளுக்கும சமமதமென்பது விளஙகுகினறது. ஆதலின பாஷையில ஏறற மொழிகள இல்லையே எனறும அனனிய மொழிகளை யமைததலுக்கு நடமிலககணம இடநதருவதில்லையே எனறும எணணி இடாப்படடு நில்லாமல ஒவ்வொருவரும தததம திறததுககேறறபடி ஒவவொரு நூலை அனனிய பாஷையிலிருநது மொழி பெயாததும, நமபாஷையில அரிய நடையில உளளவைகளை எளிய நடையில இயறறியும, தததம கடமைகளைசசெலுதத முயலவாாகளாயின நமமுடைய பாஷை மிகவிரைவில முனனுக்குவநதுவிடும.

அவதாரமும் அநஙகலை பயில்வும்.

இமமாணிககவாசகா, பாண்டிநாடடிலே வைகை யாறறங் கரையிலேஉள்ள திருவாதவூர்* எனற க்ஷேததிரத்தில தமதியற் பெயருககேறறபடி சிவனடியையே பறறிய சிந

* திருவாதவூா - வாயுபகவானுற்பூசிககபபெறற ஊா எனபது பொருள.

ஆதியாதித்தன்சோமனசுவினிகடமபேரால்
வேதியாதமைவநதேததிவிமலனையுகஙகணமூனறுங
காதலிலவணஙகககணடுகடையுகமவாதராஜன
நீதியில்வணஙகவாதபுரமெனநிகழுமூதூா.

வேப்பததூரா திருவிளையாடல்.

தையராக விளங்கிய சம்புபாதாசிருதர் என்னும் அமாத்திய பிராமணகுலசிரேஷ்டரும் அவர் மனைவியாராகிய ஞானவதி என்னும் அறிவிற்சிறந்த மாதுசிரோன்மணியாரும் இழைத்த அருந்தவப்பயனாக அவர்களுக்குப் புதல்வராக ஜனித்தார்*. சம்புபாதாசிருதர் செய்ய வேண்டுவனவற்றைச் சிறப்புறச்செய்து, தாம் இக்குழந்தையை ஸ்ரீ வாதபுரேசரது திருவருளால் அனுக்கிரகிக்கப் பெற்றாராதலின் அதற்குத் திருவாதவூரர் என்றே திருநாமமிட்டு அன்போடு வளர்த்துவந்தார். திருவாதவூரர்க்கு ஐந்துவயதானவுடனே தந்தையார் அவர்க்குக் கிரமப்படி உபநயனம் செய்வித்து ஏற்ற ஆசிரியரைத்தேடி வித்தியாரம்பஞ் செய்வித்தார். அவ்வாறு வித்தியாரம்பஞ் செய்விக்கப் பெற்றவராகிய திருவாதவூரர் அந்நல்லாசிரியனையடைந்து நெடுங்கணக்காதிகளை விரைந்துகற்றுப் பின் அந்நூல்களைப் பயிலவாராகி ஒருகணப்போதாயினும் வீணே கழியாது, திரணதூமாக்கினியார் வேம்பினெய் உண்ட கதையாகக் கல்வியிலேயே கருத்தைச் செலுத்திவந்தார். "ஒத்த விடத்து நித்திரைகொள்" என்று அவ்வை கூறியதற்கு அவரையே ஏற்ற இலக்கியமென்று கொள்ளலாம். இவ்வாறு அவர் கல்வியிலேயே கருத்தைச்செலுத்தி வந்தமையின் மிகவிரைவில் அறநூலும், பொருணூலும் வியாகரணந் தருக்கம் முதலிய கருவிநூல்களும் வீட்டுநூல்களும் ஆகிய எல்லாவற்றையும் ஒருங்கே கற்று விளங்கினார். அப்போது அவருக்கு வயது பதி

* திருப்பெருந்துறைப் புராணம், பிருகத்தீர்த்த மகாத்மியம்.

றூ. அக்காலத்தில் அந்நாட்டில் யாருக்கேனும் எந்நூலிலாவது சந்தேகமுண்டானால் அவர்கள் திருவாதவூர்சென்று நமது திருவாதவூரரை அடைந்து அடிபணிந்து கேட்டுச் சந்தேகந்தீர்ந்து செல்வார்கள். இது திருப்பெருந்துறைப் புராணத்து,

"வேதமுத லெக்கலையு மேதினியி லுணர்வார்தாம
போதமொரு சங்கையுற்ற திருவாத வூர்புகுந்து
நாதவென்த தொழுதேத்தி நவின்றுதெளிந் தேகுவரேற
சாதமிலா கல்விநிலை யெவரளக்கத் தக்காரே"

என்ற செய்யுளால் நன்கு விளங்குகின்றது. நமது ஸ்வாமிகள் இவ்வாறு இவ்வளவு சிறுவயதில் அரிய கல்வியைப்பெற்று விளங்கியதற்குக் காரணம் இப்பிறப்பில் அவர் திக சிரமம் எடுத்துக்கொண்டு பயின்றது மாத்திரமல்ல; பூர்வத்திற்பயின்ற பயிற்சியுங் கூடத் தான் என்கின்றார்கள். தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் தமதருமைத் திருக்குறளில்,

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்கின்றார். இதன்பொருள் 'கற்றுவல்ல ஒருவனுக்குத் தன்னாடும் தன்னூரும் மட்டுமல்ல; எந்நாடும், எந்த ஊரும் தன்னாடும் தன்னூருமாம்; இப்படியாயின ஒருவன் தானிறக்குமளவுங் கல்லாதிருப்பதேன்?' என்பதாம். கற்றுவல்ல ஒருவருக்கு வேற்றுநாடும் வேற்றூரும் தமநாடும் தமஊரும் ஆகும் எனவே கற்குந்தொழிலை விட்டொழுகுபவர்க்குத் தமநாடுந் தமஊருங்கூடத் தம்முடையன அல்லாதுபோம் என

பதும் அதனாற்றான் விளங்குகின்றது. இதற்கு இலக்கியந்தேட நெடுந்தூரஞ்செல்ல வேண்டுவதில்லை. பிற்காலத்திருந்த நமதேசத்துராஜாக்கள் கல்விகற்குந்தன்மையைக் கைவிட்டு விவேக சூன்யர்களாகி ஐக்கியமின்றி ஒருவரோடொருவர் மாறுகொண்டிருந்தமையால் அவர்களுக்குத் தங்களுடைய சொந்தநாடும் நகரமும் தங்களுடையன அல்லாது போகவும், அவை, கல்வியைக் கற்குந்தொழிலைக் கைக்கொண்டு விவேக பூரணர்களாக விளங்கினமையின் வியாபாரார்த்தம் நெடுந்தூரத்தேயிருந்து இங்கே வந்த ஆங்கிலேயருடையனவாக ஆகவும், நேர்ந்திருக்கின்ற இஃதொன்றே நன்குவிளக்குகின்றது. ஆனால் நம்முடைய பிற்காலத்தரசர்கள் அப்படி அறிவினர்களாக ஐக்கியமின்றி நாடிழக்க நேர்ந்ததும், நம்முடைய நல்லபாக்கியவசத்தால்தான் என்று நினைக்கவேண்டும். ஏனென்றால் அப்படியவர்கள் நாடிழக்க நேராதிருந்தால், முன்காலத்திற் கனவிலும் கருதவொண்ணாதனவாக இக்காலத்தில் நாமனுபவிக்கும் அளவற்றவெல்லா இன்பங்களுக்கும் காரணமாக விளங்கும் ஆங்கிலேய தர்ம ராஜாங்கம் வாய்க்கும் அதிர்ஷ்டம் நேர்ந்திராது. ஆதலின் அதற்காகப் பகவானைத் தோத்திரிக்கவேண்டும்.

இக்குறளிலே நமது நாயனார் பெரும்பயனைத் தரவல்லதாகிய அக்கல்வியைச் சாந்துணையுங் கற்க வேண்டும் என்கின்றார். சாந்துணையும் கற்றால் பின் அதன் பயனை நாம் அனுபவிப்பது எப்போதோ எனின், அக்கல்வி மற்றவற்றைப்போல "உடனுடன்

அழியாது உயிரோடு சேறலிற் சார்ந்துணையுமென்றார்" என்று உரையாசிரியர் பரிமேலழகர் கூறுகின்றார். தெய்வப்புலவரும் இக்குறளிற் குறிப்பாகக் கூறிய இப் பொருளை,

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வியொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

என்ற குறளால் வலியுறுத்துகின்றார். கிரேக்கருள்ளே மகாஞானி எனவிருந்தவராகிய சாக்ரேடீஸ் என்பவரும் "கற்றல் என்பது முன்னையதை நினைவுகூருக் கொண்டிருக்கின்ற ஒரு செயலே. நம்முடைய அறிவென்பது நினைவு கூர்தலே. நாம் பிறப்பதற்குமுன் அறிந்த விஷயங்களை இப்போது நினைவுகூர்கின்றோம்" என்கின்றார்.

இனி ஒரு சாரார், "யேசுகிறிஸ்துவானவர் ஒரு பிறவிக்குருடனைச் சந்தித்தபோது அவருடைய சிஷ்யர்கள், அவரைநோக்கி 'ரபீ† இவன் குருடனாய்ப் பிறந்தது யார்செய்த பாவம், இவன்செய்தபாவமோ, இவனைப் பெற்றவர்கள்செய்தபாவமோ' என்று கேட்டார்கள்; ஆதலின் இப்பிறப்புக்கு முன்னும் ஒருபிறப்பு இருந்திருக்கும் என்று கர்த்தரின் சிஷ்யர்கள் கருதியிருந்ததாகத் தெரிகின்றது. மற்றோரிடத்தில் யேசு தம் சிஷ்யர்களை நோக்கி ‡'என்பிதாவின்வீட்டில் அநேக

---

* Our learning is only a process of recollecting and our knowledge is recolletion We recollect the things of which we have received knowledge before our birth'

† யோவான் IX. 2.

‡ யோவான் XIV 2

வாசஸ்தலங்கள் உண்டு. அப்படி யில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் என்கின்றார். அங்குசெல்லும் அனைவரையும் ஒருங்கே கொள்ளத் தக்க விசாலமுடையதாக ஒரே வாசஸ்தலமாக இராமல் பலவேறு வாசஸ்தலங்கள் இருந்ததற்குக் காரணம், அங்கே செல்லுபவர்களது தரத்துக்குத் தக்கவாறு அமையும்படி கருதியே என்று நினைக்க இடமுண்டாகின்றது. இவ்வுலகில் நன்னெறி யொழுகிப் பிதாவின் வீட்டிலுள்ள ஒரு வாசஸ்தலத்தை யடைந்தவர்கள் பின் தக்கவாறு ஒழுகி அறிவுநிறைந்தாக விளங்கும் ஸ்தலத்திற் பிரவேசம் பெறுவார்கள் என்றும் கருதக்கூடியதாக இருக்கின்றது. ஆதிமுதற் கொண்டே தேவலோகத்தில் தேவனுடன் திவ்யதேகியாய் விளங்கியிருந்த யேசுவானவர் உலகரக்ஷணார்த்தம் தேவனால் அனுப்பப்பட்டு வருகையில் முன் இருந்த திவ்ய தேகத்தை யொழித்துவிட்டு, கன்னிமரியாளின் கர்ப்பத்துட் புகுந்து, மானிடதேகம் பெற்றுப் பிறந்தார். அவர் தன்பிதாவினிடத்துக் கேட்டவைகளை உலகுக்குபதேசித்தார். தாம் வந்தகாரியங்களெல்லாம் முடித்தபின்பு மானிடதேகத்தை ஒழித்துவிட்டு முன்னைய திவ்யதேகத்தை வகித்துக்கொண்டு தேவலோகத்தில் இருக்கின்றார் என்னப்படுகின்றது. ஆத்மாவின் முன்னும் பின்னும் பிறப்புண்டென்பதே விவிலிய நூலுக்கும் உடன்பாடென்றாகின்றது. அன்றியும் யேசு செய்த அற்புதங்களைப் பற்றிக் கேள்விப்பட்டபோது ஏரோதென்பவன் அவரைத் தன்னால் சிரச்சேதம் பண்ணப்பட்ட யோவான் என்றெண்ணி

ஞன் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. சிலர் அவரை யோனு என்றும் சிலர் எலியா என்றும் கருதினார்கள் என்றும் தெரிகின்றது. முன்னே தேவலோகத்தில் தேவதூதர்களாயிருந்தோர் சிலர் தங்கள் தீச்செயல் காரணமாகத் தேவகோபத்துக்காளாகித் தேவலோகத்தை விட்டுப் பூலோகப் பிரவேசஞ்செய்து தீங்கிழைத்துத் திரிகின்றார்கள் என்றும் அங்கே கூறப்பட்டுள்ளது. ஆதலின் தீச்செயல் புரிந்தோர் இழிபிறப்படைந்தும் நற்செயல் புரிந்தோர் நலனுடம்படைந்தும் முறையே துன்பும் இன்பும் நுகர்வர் என்பதே விவிலியநூலுக்கும் கருத்தாகத் தோன்றுகின்றது. யேசுவானவர் தேவாலயத்துட் புகுந்து அருமையாகப் பிரசங்கித்தபோது, கேட்டிருந்தவர்கள், இவர் கல்லாதவராக இருந்தும் வேத எழுத்துக்களை எவ்வளவு நன்றாகச் சொல்லுகின்றார் என்று ஆச்சரியப் பட்டார்கள். அவரும் தாம் பிதாவினிடத்தில் கேட்டவைகளையே சொல்வதாகக் கூறினார். ஆதலின் சாக்ரேடீஸ் கூறியபடி நாம் முன்னே கற்றதை இப்போது இப்பிறப்பில் நினைவுகூருகின்றோம் என்பதே விவிலிய நூலுக்கும் உடன்பாடு" என்கின்றார்கள்.

அரசனையடைந்து அமைச்சுரிமையடைந்தது.

இவற்றின் உண்மை இன்மைகள் எப்படியோ இருக்கட்டும். திருவாதவூரர் நிறைந்த கல்வியுடையவராகச் சிறந்து விளங்கினார் என்பதுதான் நமக்குவிஷயம். இவ்வாறு இவர் சிறந்து விளங்குஞ் செய்தியை அக்காலத்தில் பாண்டிநாட்டை ஆட்சிபுரிந்துவந்த அரிமர்த்தனபாண்டியன் கேள்வியுற்றுச் சில

பரிசனங்களையனுப்பி அவரைத் தன்சமுகத்துக் கழைப்பித்தான். இதனாலே இவ்வரசன் கலவியில அபிமானமுடையவன் எனபது நனகு விளஙகுகின்றது.

“அகத்தினழகு முகத்தின விளங்கும்” என்றபடி திவ்விய தேஜசோடுங் கூடி விளங்கும திருவாதவூரடிகளது திருவுருவபபொலிவைக்கணடதும பேரறிவுடையானாகிய அரிமர்த்தனன் அகமிகமகிழ்நது ராஜயதநதிர முதலிய கலைகளிற சில விஷயஙகளை வினவினன. ஐயநதிரிபறக் கற்றுணர்நத திருவாதவூரர் அவறறையெலலாம நனகினிது பிரசாரணம செயதனா. அரசாதலைவன, ஆனநதக கடலிடை மூழ்கி அமைசசா முகநோககிப 'பேரறிவுடையீர்' இவவாதவூரடிகளது கலவித்திறமென்னே! இவ்வளவினதென்று எலலையிட்டுரைக்க முடியாததாக இருக்கினறது. மணறகேணியிற றோண்டுநதோறும நீாசுரபபதுபோல யான் கேட்குநதோறும இவரிடததிருநது விடை புறப்பட்டுக்கொண்டே இருககினறது. “கலவிகரையில” என பார்கள்; இவரது திறஙகண்டுதானே? அறிவின்றலைவராகிய இவாககு இதுமுதல் *'பிரமராயர்' என்று பட்டம் சூட்டியிருக்கின்றேன். இனி நீவிர் எலலோரும் இவரை அப்பெயர்கொண்டே அழையுங்கள்'†

* பிரமராயர் என்பது பிரதான மந்திரித்துவம் வகிப்போர்க்குக்கொடுக்கும் ஓர்பட்டம். வம்சசேகரன் காலத்தும் பிரதான மந்திரிக்கு இப்பெயரிருந்ததாக விலஸன் பண்டிதா கூறுகின்றார்.

'மறைமுதற் கலைகளெல்லா மாணபுற வினவுந்தோறுங்
குறைதவிர் விடைகொடுக்கக் கொற்றவ னுவகைபூத்து
நிறையெது வினவினுறு நிகழ்த்திடு மிவர்க்கின்றாதி
யறைகுதிர் பிரமராய ரென்றமைச் சரைப்பார்த்தோதி.

என்றுரைத்துவிட்டுத் தன்னுள் 'கல்வியின் கரை கண்டு விளங்கும் இவர் மனிதப்பிறப்பினர் அல்லர்; தெய்வப்பிறப்பாகவே யிருக்கவேண்டும். எந்தத் தேவதையின் அமிசமாக அவதரித்தவரோ தெரியவில்லை. நீதிநெறிவிலகி நன்னெறியிற் செலுத்தும் பேரறிவுடையாரை அரசனாகவுள்ளான் தனக்குத் துணையாகக் கொள்ளவேண்டும் என்பார்கள். இவரோ அறநூல்களின் நுட்பங்களை நன்கறிந்தவர்; ஆண்டில் இளையராக இருப்பினும் அறிவில் நம்மினும் மிக மூத்து விளங்குபவர்; மழையினது இன்மை மிகுதிகளாலும், காற்று, தீ, பிணி என்றிவற்றாலும் வருவனவாகிய தெய்வத்தான் வரும் துன்பங்களை உற்பாதங்களான் அறிந்து அவ்வவற்றுக்குச் சொல்லியபடி கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளாலும், பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் என்றிவர்களான் வரும் துன்பங்களை அவரவராக [illegible] குணம், இங்கிதம், ஆகாரம், செயல் என்பவற்றான் அறிந்து அவ்வவற்றுக் கேற்றபடி சாம, பேத, தான, தண்டங்களாகிய உபாயங்களுள் ஒன்றினாலும் நீக்கும் தன்மையையுடையார் இத்தகைய பெரியவரொருவர் நம்மவராகக் கொள்ளக்கிடைப்பது அரியவற்றுளெல்லாம் அரியது. ஆதலின் இப்பெரியாரை நமக்குப் பெருந்துணையாகக் கொள்ளுதும்' என்று இவ்வாறு ஆராய்ந்து தீர்மானித்தான்; அவ்வாறு தீர்மானித்த அரசன், உடனே மந்திரிமார்களது முக நோக்கிக் 'கல்விநூல்வல்லீர்! கல்வியங் கடலாகிய இப்பிரமராயரை உங்களுக்கெல்லாம் முதல்வராக

இருக்கும்படி பிரதான மந்திரியாராக நியமித்திருக்கிறேன்' என்றுரைத்தான். அதுகேட்ட அமைச்சரெல்லாரும் அரசனை அடிபணிந்து 'வேந்தர் தலைவ! உனது அருளுடைமைகேட்டு நாங்கள் மிக மகிழ்ச்சியடைந்தோம். இப்பெரியோரை எங்களுக்கு முதல்வராகத் தந்தசெயலுக்குக் கைம்மாறு யாது ளது?' என்றனர். பின்பு அமைச்சர்களும் பிறரும் 'அரசன் தக்கது செய்தான், தக்கது செய்தான்' எனத் தத்தமிற் கூறி மகிழ்ந்தனர். பின்பு அரிமர்த்தனன் ஆர கேயூர கடக கங்கணாதி யாபரணங்களும் பீதாம்பராதியுடைகளும் தேராதிநாலவகைப் படைகளும் கொடி குடை யாலவட்டம் சின்னம் முதலியசம்பத்தும் பிரமராயர்க்குச் சிறப்பநல்கினன்.

'பெருவிலைச் செம்பொ னுடை பிறங்குகுப் பாயந் தேசு
தருதலைச சாத்து மாயோன றுணுமவெஃ குத்த ரீய
மருமணி மதாணி யாழி யாரமொண கடகம பொனனுண்
திருமணிக் குழைமுன மறறுஞ செயிரற வழங்கிப் பின்னா

'மழைமதக களிறு பாய்மா வாவுமான் பூண்ட பொற்றே
ரிழைமணிச சிவிகை மறறும வருந்தினிக கியல நலகி
குழையுடற கவரி வெறறிக கொடிகுடை யால வட்டந்
தழைதரு மொழிய வாதிச சம்பத்தும பெருக நலகி.'

தந்தையார் விருப்பத்தினபடி இதுவரையும் திருவாதவூரர் என்றழைத்து வந்தோம், இனிப் பாண்டியராசனது ஆணைப்படி நாமும் நமது ஸ்வாமிகளைப் பிரமராயரென்றே வழங்குவோமாக. பிரமராயர் அவற்றையெல்லாம் பெருமானது திருவருளே என்று அன்போடே

று அரசனிடத்தே புறவிடைகொண்டு அரண்மனை யைவிட்டுப் பலவகைவாத்தியங்களு முழங்கப் புறப் பட்டனர்.

இவ்வுலகத்தில் அற்பசெல்வமெய்தினோரும் தம் முன்னிலையைமறந்தகங்கரித்து மற்றவர்களை ஒரு பொருட்டாகவே மதியார்கள். மற்றவர்களைமட்டுமோ? தமக்கு அச்செல்வம் வருதற்கு உதவியாக இருந்தவர்களையும் உற்று நோக்கார்கள். கடவுள்சிந்தனை கனவிலுங் கருதார்கள். நம்மு பிரமராயர், பாண்டியராஜன் தமகல்வித் திறத்தை மிகவியந்து 'பிரமராயர்' (அறிவிற்றலைவர்) எனப் பட்டமளித்தபோதும், அமைச்சரும் அடுத்து நின்றோரும் அகமகிழ்ந்து புகழ்கையிலும், என்னசெய்தார்? அவையெல்லாம் தம்முடைய கல்வித்திறம்பற்றி நேர்ந்தன எனக்கருதினாரா? இல்லை. எல்லாம் எம்பெருமானுடைய திருவருளே என்றுதான் கருதினார்.

'மிக்கதுங் குறைந்த தூஞ்சீர் தூக்கிடும் விறல்சால் வேந்தன்
றக்கது செய்தா னென்னுத தத்தமின அமைச்சர் சொற்றூர்
புக்கது நமக்கோர் செல்வ மெனமற்றோ ருவகை பூத்தார்
அக்கது பூண்பெம் மான்செய அருளென வைய ரேறனார்.'

தென்னவனால் பலவகைச்செல்வமு முற்றுச் செல்வவராகிய பிரமராயர் தமக்கு இவ்வளவு சிறப்பும் உறுதற்குக்காரணம் எம்பெருமானது திருவருளே என்றுணர்ந்தவராய் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவாலயத்தை அடைந்து பொற்றாமரைத்தடத்தின்மூழ்கிக்கண்மணியும் நீறுந் தன்னுறப்புனைந்து உட்புகுந்து இந்திரவிமானத் தெழுந்தருளியிருக்கும் சந்திரசூடா

மணியையும் அவரிடம்பிரியா அங்கயற்கண்ணியம்மை யையும் அடிபணிந்து திருநீறேற்றுத் தமமனையடைந் தார். பிரமராயர் இவ்வாறு அரசனுற பெருஞ்சிறப் பெய்திவருகின்றதை அறிந்த சுற்றத்தாரும் சூழவி ருந்தாரும் கூடிவரச சம்புபாதாசிருதா ஞானவதி சமே தராக அஷ்டமங்கலங்களுடன் எதிர்வந்து மகிழ்ந்து அழைத்துச் சென்றார். பின்பு மறுதினம் முதலாகப் பிரமராயர் தமது முதன்மந்திரித்தொழிலை வகிப்பாரா கிப்பாண்டிநாட்டின் எல்லையையும் அதனுள் வசிக்கும் குடிகள் இவ்வளவினர் என்பதையும் அவர்கள் செ லுத்தும் இறைப்பொருள் இத்துணை என்பதையும் உல குபொருள்வருவாயும் மற்ற அரசர்கள் செலுத்தும் கப்பப்பணமும் கடல்களிலும் மலைகளிலும் வரும்பொ ருள்களும் இத்துணையன என்பதும் ஆக வருவாய் இத் துணைத்தென்பதும் அன்னசத்திரம், தண்ணீர்ப்பந்தல், கலவிச்சாலை, தேவாலயம் என்பனவாதி தாமவிஷயங் களிற் செலவாகுந்தொகையும் படையாதிகளுக்கு நல் கும் பொருளும் ஆக வருவாயிலிருந்து செலவாகுந் தொகை இவ்வளவென்பதும் அச்செலவுநீங்கப் பண் டாரத்துடன் சேர்க்கப்படுவன இவ்வளவினவென்பதும் நன்றாக அறிந்துகொண்டார். அக்காலத்திற் பாண்டி நாட்டின் எல்லையென்ன என்பதை அறியவேண்டுவ தவசியம். அது,

"பெருவெளி மேலபா லாகப் பெருங்கடல் கீழ்பா லாக
வொருவரும் புனலசால் வெள்ளா றுத்தர மாகத் தெற்குப்
பொருவருங் குமரியாகப் போந்தநான் கெல்லை யுள்ளு
மருவிய குடிகணலகு மிறைப்பொருள் வருவாய் தோநதும"

என்ற செய்யுளாற் குறிக்கப்படுகின்றது. வடக்கே

வெள்ளாறும், கிழக்கே கடலும் (Gulf of Mannar and Palkstrait) தெற்கே கன்னியாகுமரியும் மேற்கே பெருவழியும் (The great highway) பாண்டிநாட்டுக் கெல்லையாக இருந்தன என்று தெரிகின்றது. வெள்ளாறு சோழதேசத்துக்குத் தென்னெல்லை என்னப் படுகின்றது. ஆதலின் இருநாட்டுக்கும் பொதுவெல்லை என்னப் படுகின்ற வெள்ளாறு, பறங்கிப்பேட்டை (Porto Novo) யண்டைக் கடலில்விழும் வெள்ளாறு அல்ல; ஏனெனில் அப்படிக்கொண்டால் சோழர்களுக்குப் பிரதானமாகவிளங்கிய (பிற்காலத்தில் தஞ்சை கட்டப்பட்ட) பிரதேசங்கள் அவர்கள் நாட்டினின்று பிரிபடும். ஆதலால் எல்லையென்ற வெள்ளாறு திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் மருங்காபுரி அடுத்த பர்வதங்களில் உற்பத்தியாகித் தென்கிழக்கு மார்க்கமாகப் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தின் வழியாகஓடிக் கடலில் (in Palk Strait at Point Calymere) விழுகின்ற வெள்ளாறாகத்தா னிருக்கவேண்டும். நாட்டுக்கோட்டைச் செட்டிப்பெண்கள் வெள்ளாற்றைக் கடக்கலாகாதென்று நம்பியிருந்த நம்பிக்கையும் இதற்காதாரமாகின்றது. மேற்கெல்லை பெருவழி செய்யுளிற் குறித்தபடி பெருவெளியல்ல மற்றொருசெய்யுளில் அதே வழி வழுதிக்கால் என்னப்படுகின்றது; அதாவது பாண்டியமன்னன் வழி என்பதுபொருள். அது குற்றாலத்துக்குச் சமீபத்தில் மலைமார்க்கமாகத் திருவாங்கூர்ச் சீமைக்குள் கொண்டுபோய்விடும்வழி. அதில் இங்கே குறிக்கப்பட்டது அரசன்கோவில்வழி; பிற்காலத்தில் அவ்வழி அதிகமாக உபயோகிக்கப்படுவதில்லை. இப

பொதியவழி அதாவது அம்மலைவழியாக இப்போது செல்லும்வழி ஆரியன்காவண்டையிருக்கின்றது. இதன்படி தெற்குத் திருவாங்கூரில் கன்னியாகுமரிக்கு வடமேற்கேயிருக்கின்ற நஞ்சைநாடுமுழுதும் பாண்டியதேசத்துள் அடங்கியிருந்திருக்கின்றது.

பிரமராயர் ஒருவினை தொடங்குங்காலத்துப் பாரதூரம்பார்த்தறிந்து தொடங்குவார். முதலிலே அவ்வினைவலியைப் பார்ப்பார். பின் அது முடித்தலில் தமக்குள்ள தானையும் பொருளுமாகிய கருவிகளின்வலியை ஆராய்வார். பின் அதற்குத் தடையாக இருக்கும் தடைவலியைப்பார்ப்பார். பின் இருதிறத்தார்க்குமுள்ள துணைவலியையாராய்வார். அவ்வினைமுடிப்பின் பின்னுலெண்ணிக்கும் என்பதைக் கவனிப்பார். கூகையைக் காக்கையானது பகலில்வெல்லுமாதலின் எதையுமியற்றுதற்கு ஏற்றகாலம் யாதெனப்பார்ப்பார். நீரிற்றேரும் நிலத்திற் படவும் செல்லா ஆதலின், வாய்த்த இடம்யாதென்றாய்வார்.

> "ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
> கருதி யிடத்தாற் செயின்."

வினைசெய்யுங்காலத்துச் சோம்பாமையும் குடிகாத்தலும் நீதிநூல்களைக்கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும் முயற்சியுடைமையும் உடையராக இருந்தார். போர்வருங்காலங்களில் பகைவர்க்குத் துணையாயினாரை அவரிற்பிரிக்கவேண்டிற் பிரித்திடுவர். தம்பாலாரைத் தம்மிற்பிரியாதபடி இன்சொற்களாற் பேணிக்கொள்வர். முன்னே தம்மினும் தம்பாலாரினும் பிரிந்தாரைப் பொருத்தவேண்டிற் பொருத்துவர். ஒருகாரி

யப செய்கை பலவாறுதோன்றின அவற்றுள் ஆவதா ராய்வார். அதுசெய்யுங்கால பலிப்பது நாடிச்செய்வார். ஒருவரைப் பிரித்தலோ பொருத்தலோ எதுசெய்வ தென்று அரசனுக்கு ஐயம் நிகழ்ந்தபோது அவனுக்கு ஒன்றைத்தேர்ந்து இதுவேசெய்யற்பாலதெனத் துணி வுபிறக்குமவகை சொல்வார். தாம் அறிந்துசொல்லும் சொற்களையும் சிலபோது அரசன அழித்துத் தானும அறியானுய் விளங்கினும அதுநோக்கி ஒழியாது அவ னுக்கு நனமைதருவனவற்றைக்கூறுதலிலபினனிடார். பலவாறு சொலவானேன இவரது அமைச்சினற்பிறந் தால அரிமாத்தனனுக்கு முனனே பகையாயிருந்தவா களும இப்போது இவனுடைய நட்பைநாடினாகள். எட்டாத பலவேறு தீவுகளிலிருந்தரசாட்சிபுரியும நீதி மனனாகளும தங்களதங்கள் தேசத்துள்ள அரியபொ ருளகளை இவனுக்குக காணிக்கையாக அனுப்பி நண்பு பாராட்டினாகள.

"பலவுரைத் திடலென் முனனுட் பகைவரா யுள்ளா ரியாரும்
விலகுறு தரசன பாஙகா மேவினா நட்புப் பூணடார
வலமிகு செஙகோல செலலாத் தீபதது வாழகின றுரு
நிலவரும பொருளவி டுதது நேசிப்ப வியறறி வாழநாள."

இப்பிரமராயர் வேதமமுதலிய நூலகளையெல்லாம நன் றுககறறு விளஙகியவா ஆதலின எம்பெருமான்மாட் டும அடியவாகணமாட்டும அளவுகடந்த அனபுபாராட் டிவந்தார். நலலனவறறுளெல்லாஞ் சிறந்துவிளங்குந் தனமையதாகிய இவ்வனபு ஒனறுஇருககின எலலாத் தருமங்களும எணணுமலே நிறைவேறும். அல்லன வெலலாம அழிவுறும.

"அறத்திற்கே யன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை"

என்றார் நாயனார். யேசுவானவர் முமுக்ஷுக்களாயிருந்த யூதர்சிலரைநோக்கி, 'அன்பர்களே! நீங்கள் அன்பைக் கைக்கொள்ளுவீர்களானால் எல்லாக்கற்பனைகளும் எளிதில் நிறைவேறும்' என்றுரைத்தார். அஃது உண்மைதான். பாருங்கள் "எனக்கு முன்பாக உனக்கு வேறு தேவிருக்கவேண்டாம்" என்பது விவிலியநூற்படி தேவகற்பனையுள் ஒன்றல்லவா? ஒருவன் கடவுளிடத்து அன்புகொள்ளுவானாயின் அவனுக்கு இதை ஒருவர் உரைக்கவேண்டுமோ? அன்பே அவனுக்கு இதைக் கற்பிக்கும். "அவன்பேரை வீணில் வழங்காதே" என்பதும் ஒருகற்பனை அவன் அன்புகொண்டிருந்தால் கனவிலாயினும் அவர்பெயரை வீணாகவழங்கக் கருதுவானோ? அதனால் அன்பானது கடவுளைப்பற்றிய எல்லாக்கற்பனையையும் நிறைவேற்றுகின்றதென்றேற்படுகின்றது; அதுமட்டுமல்ல. மனிதனைப் பற்றிய கற்பனைகளையும் அவ்வன்பே நிறைவேற்றும். "கடவுளிடத்து நன்றிபாராட்டக்கூடியவன் செய்யக்கூடிய சிறந்த செயலாவது அவருடைய சிருஷ்டிகளிடத்தில் அன்புபாராட்டுதலே" என்றார் ஒருவர். தேவனிடத்தில் அன்புபாராட்டுகின்ற ஒருவனைநோக்கிப் "பெற்றோர்களை நேசிப்பாயாக" என்று கற்பிக்கவேண்டுமோ? அவன் அவருடைய சிருஷ்டிகள் எல்லாரிடத்தும் அன்புபாராட்டுபவனாயிருக்கத் தன்பெற்றோரை அவமதிப்பானோ? "திருடாதே" என்று அவனைநோக்கிச்சொல்லுவதாக இருந்தால் அது அவனுக்கு ஓர் குறைவாகவே

யிருக்கும் தன்னிடத்துள்ள பொருள்களைத் தான் அனுபவித்தலினும் தனனால விருப்பப்படுவன் கொண்டனுபவித்து மகிழ்தலை அதிகமாக விரும்பும் இவன், பிறாக்கு வருத்தமுண்டாக அவாபொருளை எப்படி விரும்பித திருடுவான்.

> "அன்பிலா ரெலலாந் தமக்குரிய ரன்புடையா
> ரென்பு முரியா பிறர்க்கு."

என்றார் பெருநாவலர். பரோபகாரத்தின மிகக திருமமும பராபகாரததின மிகக பாவமும இலலையெனத் தருமசாத்திரங் கூறுகின்றது. ஆதலின அன்பெனனும ஒரு குணம இருபபின் ஏனைகுணங்களெல்லாம எளிதின உண்டாம எனறுகினறது. அஃதொன்றின றெனின் வேறு எது இருப்பினும பயனே இலலை.

இவ்வனபுடைமையிலே சிறநது விளங்கியவர் இப்பிரமராயா. ஆதலின அநதணரென்பது இவாக்கே தகும. அந்தணரெனறால எனன? எதையும தண்மையுடன இயறறுபவா எனறுபொருள.

> "அந்தண ரெனபோ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செநதணமை பூண்டொழுக லான்."

என்றார் பெருநாவலராகிய பெருமான்.

> "அழிபொரு ளுணர்வு மென்று மழிவதின் றாகி யின்பங்
> கொழிபொரு ளுணாவும போதின மணமென மனததுட் கூட
> பழிபடு மிமமை யாசைப் பநதமா மறுமை யாசைப் [ப்
> யொழிதர வெச்ச மாகி யுள்ளது பெறுதல் வேட்பார்"

என்ற செய்யுளிறகூறியபடி பிரமராயர்க்கு நித்தியப்பொருள் இன்ன அநித்தியப் பொருள் இன்ன என்ற பகுத்தறிவும், "அநதமிலின்பத் தழிவில்வீட்"டுணாவும், அரும

ஆன்மவிசாரம்.

புக்கு, அது மலராகுநதருணம அடுகக அடுகக மணம அதிகரிததுவருவதுபோல நாளுககுநாள அதிகரித்து வரததொடங்கியது. அவா தமமுள ஆராயவாராயி ஞா:—"பலவகைபபிறபபுக்களையும விடுதது இமமானு டப்பிறப்படைதல் எவ்வளவு அருமை. நூவாப்முதலி யன இனமிக் கடலைக கையால நீநதிக கரைகாணபது போலனறோ இருக்கின்றது. இவ்வளவு அரிதிற்கி டைத்ததாகிய இம்மானிடதேகமோ இனனகாலததில தான அழியும எனபதிலலை. கருவிலுடடானே கழி வனபல. உதிததவுடன ஒடுவனபல. பாலப்பருவத துமபல. தருணபபருவததுமபல. முதுமையிலும பல. வருமபிறவியோ மானிடபபிறவிதான எனபது நிசசயமிலலை. நாம இவ்வுலகில எவவளவுபொருளைத தேடினும என்ன. அதனால நமககு நிலைபெறற இன பஞ் சிததிக்குமா? இனறு நமக்கு நமனேனை வநது விடின் இபபொருள தடைசெயயுமா?. ஆதலால இப பொருணமுயறசியில யாதும பயனிலலை. பகவான திருவடியடைநது மோக்ஷசாமபிராசசியமாகிய பெரும பேற்றையடையும வழியைத தேடவேணடும அதை உணாத்தும பெரியோா யாரோ? அககுருதரிசனம நமககு எப்போதுவாய்ககுமோ?

"கரவி லாதபே ரன்பினுக கெளிவருங கருணைக
குரவ ராரு ளினறியிக கொடியவெம் பாசம
புரையில கேள்வியாற கழிபபது புணையினு லன்றி
யுரவு நீர்க்கடல் கரஙகொடு நீந்துவ தொக்கும்."

ஆதலின அக்குருதரிசனமினறி ஒன்றும நடவாதே. எபபோது திருவருள் கூடிமுடிககுமோ?" என்று

சவலைககடலுள ழுழகினா. கலவிமானகள நமமை நாடிவருநதோறும அவாகளைநோககி "நாமயாா? இவவுலகாதிகளைபபடைததான யாா? அவன என படைபபாதி புரியவேணடும்? அவன உணடெனபதறகுப பிரமாணம எனன?" எனபனவாதி விஷயஙகளை வினவுவாா. அவாகள கூறிய விடையெலலாம அதிகதாக முடையானுககு உவாநீரால தாகம நீஙகாதவாறுபோல இவாககுத திருபதி தராவாயின.

"எணணி லாரிடத ளஞ்சளந தறிபொரு ளெல்லா
முணணு நீாவிடாயக குவரிநீ ருணடவ ரொப்ப
வணண லாரகத தமைவுறு தரசனுக குயிருங
கணணு மாயமைச சுரிமையுங கைவிடா தியலவாா"

இவவாறு பிரமராயாககு ஆனமவிசாரம அதிகரிக்கவே அரசனறொழிலைப பாராடடுவதிற

சததிநிபாத முறறது

சிரததைதவிாநதது. நாடோறும அரசனைசெலவதும, அவசியமானவறறை வினவிககொணடு மீளவதும, ஆலயததையடைநது எமபெருமானைப பணிவதும, ஆனமாவையும ஆணடவனையும அவ்வாணடவனையடையு நெறியையுமபறறி விசாரஞசெயவதுமே காரியமாக விருநதாா. ஊறறுக கததில உளளஞ செலுததாா. பின அவாககு அதிதீவரதர சததினிபாதமாகிய நாலாஞ சததினிபாதம உணடாயிறறு அதன றனமை

தஸ்யாம் வதிதரா த்ரியாம் ஜ்ஞஸ்யாயெ நியாதிகா | ஶக்தி நிர்வ த்ருதெ தஸ்யாம் நிவ்ருத்தாயாம் ஜ்ஞா ந்த: ||

வைராக்யஞ்ஜாயதே க்ஷிப்ரம் ஸம்ஸாரா[illegible] [illegible] | ஶிவபக்திர்ஜாயதே தஸ்ய [illegible] ||

கதா த்ரக்ஷ்யாமி தேவேஶம் மோக்ஷ்யே பந்தாத் கதா | கோ வா தேஶயிதா ஸம்யக் இதி புத்திஃ ப்ரஜாயதே இதி ||

என்ற ஆகம வசனங்களால் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. இதன்பொருள்: சத்திநிபாதமுண்டாம்போது மலத்தினுடைய சத்தி நீங்கும்; அது நீங்கப்பெற்ற ஆன்மாவிற்கு விரைவில் சம்சாரத்தில் விரத்தியுண்டாகும்; கடவுளுடைய திருவடியில் இச்சையுண்டாகும்; ஈசுவரனை எப்போது காணப்போகின்றேன்; பந்தத்தினின்றும் எப்போது விடுபடுவேன்; நம்முளைக் காட்டுகின்ற ஆசாரியன் யாரோ; என்று இவ்விதம் புத்தியுண்டாகும், என்பதாம்.

ஆதலின் நமது பிரமராயர்க்கு அமைச்சரிமையில் சிரத்தை பின்னுந் தளர்ந்து இவ்வுலகையாளுவதில் அவர்க்கு ஆசையொழிந்தது. இவ்வுலக ஆட்சியைமட்டுமோ? இந்திராதி தேவர்களுடைய ஐச்சுவரியத்தையுங் கக்கிய சோறுக்கு மதித்தார். 'நமக்கு எப்போது ஆன்மதரிசனமும் அதைப்பற்றித் தத்துவதரிசனமும் அதனைத் தவிர்க்கும் சிவதரிசனமும் ஆகுமோ? ஆனந்தமயமான [illegible] எப்போது வாய்க்குமோ? இன்று நம்மெல்லாரு[illegible]ரனைமாகிய குருதரிசனங் கிடைப்பதெப்போதோ? நம்முடைய சந்தேகமெல்லாம் முற்றும் நிவர்த்தியாகுமாறு கேட்டுக்கேட்டுத் தெளிவதெப்போதோ?' மென்று கவ

லைகளே அவர்க்குச் சதாகாலமும் இருந்தன. இப்பிர பஞ்சவாழ்க்கை அவர்க்குப் பெருஞ்சுமையாகக் காணப் பட்டது. இதைக் கழிப்பதெப்போதெனக் கவன்றார். பெருஞ்சுமை சுமப்போன் அதை எப்போது இறக்கு வோம் எனக் கருதல் சகஜந்தானே. நெருப்பாலே சூழப்பெற்றவன் விரைவில் அதைக் கடந்துபோகக் கருதுவான். அடுத்த நிமிஷத்தில் அடுத்தெரிந்துவிடு மே என்றஞ்சுவான். கணமும் நீட்டியான். கடுகெ னக் கடக்கத் துணிவான். நமது பிரமராயருக்கும் 'அந்தோ! விடுதலைக்குரிய மார்க்கம் நமக்கு இன்னும் சித்திக்கவில்லையே. எந்தக்கணத்தில் நமது காயத்தைக் கழிவுறுவிடுமோ' என்பதே கவலை.

'இந்த வுலக போகவெறுப்
பெய்திற் றெனப்பெற் றென்னமர்
முந்த வணையக் வினைமுழுதாண்
முதல்வன் மலர்மே லவன்றிருமா
லந்த வங்கையும் பே கமெலா
நாடா வமன பதமாகச்
சந்த மருவு மொருநாலாஞ்
சத்தி பதிந்த தையாபால்''

"சத்தி பதிந்த பாசத்திரத்தே
தக்கோர் புகழ்மந் திரியர்க்கு
முத்தி விருப்ப மேன்மேலு
மூளா நிற்க வதனலக்கு
இத்தி யமைந்த வாசிரியற்
றேடித் தேடி வருந்துவார்
பத்தி யமைந்தே குருக்கொண்டு
பிணிரு ஞானா பரனையோர்"

ஞ் ஞ சிரியன என்றுவரு
நயமு ஞானமுஞ் சங்கைமெலா
மாறு விருப்பின விருப்பவிருப்ப
அறைபந் தெளிவ தெப்போது
மாறு வருன ரருட்கிலகாய
வயக்கி யடிக்கீழ் வைப்பதென்று
நேரு தரிக்குஞ் சிவானந்தந்
திளைத்தின புறமென மெறனநினைப்பார்

'பொருப்பா லென்னுஞ் சுமைபரித்தேன்
போகட் டிடவென் னுதலபோலு
நெருப்பால வளையப் படுமொருவ
னீங்க நினைக்கு மதுபோலுஞ்
சுருப்பா லூறுத்தும பிரபஞ்சக
கலப்பின வீடு கருதுவார
சிருப்பா லுறுவ தெனமென்று
தெரிந்து தெரிந்த முப்புவார்''

குதிரை கொள்ளப் புறப்பட்டது.

இவ்வாறிருப்பவர் ஒருநாள் அரசவையடைந்து ஆசனத்தமர்ந்திருந்தார். அப்போது பரிகாப்பாளர் அவையிடையடைந்து அரசனையடிபணிந்து ஒருபுறத்தொதுங்கினார் 'அண்ணலே! உமது பரிகளிற் பல இறந்தொழிந்தன. நோய்கொண்டனவும் மூத்தனவுமே லாயத்திருக்கின்றன' என்றார்கள். அப்போது ஆங்குற்றோர் சிலர் 'வேந்தர் தலைவ! கீழ்கடற்றுறையில் பல தேசத்துப்பரிகளும் விற்பனைக்கு வந்திருக்கின்றன' என்றார்கள். அதுகேட்ட அரசர் பெருமான் பிரமராயரது ஆனனம் நோக்கி 'அமாத்தியர் தலைவ! இன்று நமது கருவூலத்தைத் திறந்து பெருந்திரவியம் எடு

துக்கொண்டுபோய்க் கீழ்கடற்றுறையடைந்து, அங்கே கப்பலில் வந்திறங்கியிருக்கும் பரிகளுள் நல்லனவாயுள்ளவற்றை நாடி வாங்கி வருவீராக' என்றனன். “உள்ளம் வேறுபட் டமைச்சியனெறியினின்ற” பிரமராயர், அவ்வாறே பண்டாரந்திறந்து அளவற்ற திரவியம் எடுத்து அவற்றைப் பொதிகளாகக்கட்டி ஒட்டகங்களின் மீதேற்றிக் காவலாளர்களுடன் முன்செல்லும்படி அனுப்பிவிட்டுத் தாம் ஆலயத்தையடைந்து எம்பெருமானைப்பணிந்து புறவிடைபெறும் பொருட்டேசென்றார். சென்று எம்பெருமானது சந்நிதியை அடைந்து, குலபூஷணன் காலத்திருந்த அவனுடைய சேனாதிபதியாகிய சவுந்தரசாமந்தனைப்போலப் பெருமானைநோக்கி, 'வேண்டுவார் வேண்டுவ தந்தாதரிக்கும் பெருமானே! இத்திரவியத்தை உனக்கும் உனனடியார்க்குமாக ஏற்றுக்கொண்டு அடிமை என்னைக்கொள்ளவேண்டும்' என்று வேண்டினார். ஆதிசைவனாகிய அர்ச்சகரொருவன் திருநீறு பிரசாதித்தான். அதையவர் அன்போடேற்று நமக்கு இதுபோல நன்னிமித்தம் இல்லையெனக்கருதிப் புறத்தேவந்து பரிவாரங்கள் புடைசூழ்ந்துவரச் சிவிகைமேற்கொண்டு பலவகைக்கொடிகளும் குடைகளும் பலர்தாங்கிச் செல்லத் திருப்பெருந்துறையை நோக்கிச் சென்றார். சதா சிவத்தியானஞ்செய்தபடி யிருப்பாராகிய பிரமராயர்க்கு அப்பெருந்துறையை அணுக அணுக ஒரு பெருஞ்சுமை சுமந்து வருந்துவோன் அச்சுமையை இறக்கிவிட்டவுடன் எவ்வாறு உணர்வானோ அவ்வாறு தம் மனோவேதனையெல்லாம் போய்விடக்கண்டு

மகிழ்ச்சியுண்டாயிற்று. இருகண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் தம்மையறியாது ஆறுகப்பெருகியது கண்டார். பஞ்சேந்திரியங்களுக்கும் இனியன தோன்றின. வலத்தனவாய கண்ணுந்தோளுந் துடித்தன. (இஃதோர் நற்குறியென்பர்) இவ்வாறு நற்குறிகள் காணிற் காசினியிலுள்ளார் பற்பலவாறு தம்மனைவி மக்கள் வருவரென்றும் பொருட்செல்வம் போதருமென்றும் எண்ணி மகிழ்வார்கள். இடத்தோள் கண்ணுந் துடித்தல் முதலிய நிகழில் தமக்கோ தம்மைச்சார்ந்த மனைவிமக்களுக்கோ கேடெய்துமென்றுவது, தம பொருள் முதலியன அழிவுறுமென்றுவது எண்ணி வருந்துவர். நமது பிரமராயரோ எனில் தமக்கோ தம்மைச்சார்ந்தார்க்கோ, அரசபட்டம் முதலியன எய்துமென்றுவது, புறப்பட்ட உத்தேசத்தின்படி நல்லனவாகிய குதிரைகள் எளிதின் அகப்படுமென்றுவது நினைத்து மகிழ்ந்தாரில்லை. ஆயின் மகிழ்வில்லையோ எனின் மகிழ்ந்தார். என்ன எண்ணி? 'அடியேனை யாட்கொள்ளும் பரமாசாரியர் எழுந்தருளியிருக்கும் இடம்போலும் இக்ஷேத்திரம்; இதைச்சார்ந்தவுடன் குருதரிசனம் உண்டாம் போலும்' எனறெண்ணியே மகிழ்ந்தார்.

"நெருப்பிலிடு வெண்ணெயென நெஞ்சுருக வென்னை
யுருக்குமித் தனலென யொளித்தமல வாற்றல்
கருக்குமவ னாகியெனை யாள்கருணை வெள்ள
மிருக்குமிட னேயிதென வெண்ணினர்கா புக்கார்."

பின் நமது பிரமராயர் திருப்பெருந்துறையடைந்து தமக்கொரு கூடாரமமைப்பித்துப் பரிசனங்கள் முதலா

பிறரைச் சூழவிருக்கச் செய்துவிட்டுத் திருவாலயத்தையடைந்து அதற்கு முன்பக்கத்தில் இருக்கும் அக்கினிதீர்த்தத்தின் மூழ்கிப் பஸ்ம ருத்திராக்ஷதாரியாக ஆலயத்தினுட்புகுந்து எம்பெருமானாகிய ஆன்மநாதரைத் தரிசித்து விடுதியடைந்து திருவமுது செய்து கொண்டு ஆன்மநாதரது திருவடிகளிற் பொருந்திய மனமுடையவராய் உறங்கினார்.

குருவருள் பெறல்

அப்போது ஆலயத்தின் சுற்றகத்துள்ள குருந்த விருக்ஷத்தின் அடியில் ஆன்மநாதர் திவ்வியதேஜோமயமாகிய திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கவும் அவரைச் சூழ்ந்து பலவகைத் தொண்டர்கள் பலபலவிஷயங்களைக் கேட்டுத் தெளியவுமாயிருக்கக் கனவுகண்டார். பிரமராயர் அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருகக் கண்ணீர்விழுத்தி 'எப்போதும் காணாத காட்சியை இன்றுகண்டோம். நாம் இக்ஷேத்திரத்திற்கு வரும்வழியில் நேர்ந்த நன்னிமித்தங்களின்படி நம்மை ஆட்கொள்ளத்தான் பெருமான் அத்திருவுருவங் கொண்டெழுந்தருளியிருக்கின்றாரோ' என்றெண்ணி உதயத்தைநோக்கியிருந்தனர். உதயமானவுடன் எழுந்துசென்று ஆலயத்துக்கு முன்பாகவிருக்கும் அக்கினிதீர்த்தத்தே மூழ்கிப் பஸ்மருத்திராக்ஷதாரணம் பண்ணிக்கொண்டு ஆலயத்தினுட்புகுந்து ஆன்மநாயகரையும் யோகாம்பிகைத்தாயாரையும் அடிபணிந்து பிரகாரத்தினுள்ளே வலம்வருவார் முன்னாளிற்றாம் காணாதகுருந்தை எதிர்கண்டார். அதன்கீழ்த் தாம்

இரவிற் கண்டாங்கே கோடி சூரியப்பிரகாசமாகிய திவ்விய தேஜோமயரூபத்துடன் ஆசாரியர், அநேக நற்றொண்டர் தம்மைச் சூழ்ந்து சேவை செய்துறைய, இடக்கரத்தே சிவஞானபோதம் வைத்துக்கொண்டு வலக்கரத்தே சின்முத்திரைகாட்டி யோகாசனத்தெழுந்தருளி யிருப்பக் கண்டார். கண்டவுடனே 'நேற்றுக் கனவிடைக் கண்டவண்ணமே இன்று நனவிடையுங் காணப்பெற்றேன். இளகுதலில்லாத இரும்பொத்த என்மனத்தையும் தன்னிடம் வலிக்கும் இப்பெரியோருடைய திருவடிக்காந்தத்தின் தன்மையை எவ்வாறு புகழ்வேன். இனியென்னகுறை! உய்யுங் காலங் குறுகியது' என்றிவ்வாறு கருதி, 'இனி எண்ணுவதொன்றுமில்லை. இவர்தாம் அடியேனை ஆட்கொள்பவர் என்பது நிச்சயம். நம்முடைய பசுத்துவம் இக்கணத்தோடே நசித்ததென்பதற்றடையென்ன' என்று அணையுடைத்தெழுந்ததும்போல அதிகவேகமாக ஓடி அகரவுயிர்போல நிகரற்றுவிளங்குந் தன்மையராகிய பரமாசாரியரது திருவடிமலரிடையே வீழ்ந்து கிடந்தனர்.

"இவ்வண்ண மெண்ணி மற்று மெண்ணுவ தொன்று மில்லை
செவ்வண்ண ரிவரே நம்மை யாட்கொள்வ ரென்று தேறா
நவ்வண்ணம் அவ்வண்ணமே போய நசித்ததென்ன வோடிச் சென்
றவ்வண்ண மாயினாதம் அடிவண்ண மலர்க்கீழ் வீழ்ந்தார்" [ஏறெ

பின்பவ்வாசிரியர் 'எழுக!' என, பிரமராயர் எழுந்து கைகூப்பி நின்றனர். சூழ இருந்த அடியார்கள் ஒருங்குகூடி ஆசாரியரது அடிமலரிடை வீழ்ந்து வணங்கி 'ஸ்வாமீ! தேவரீர் அங்கீகரித்த இவ்வடியவரை

ஆட்கொள்ளுதல் வேண்டும்' என்று விண்ணப்பித்தார்கள். உடனே பெருமான் அவ்வடியவர்களை நோக்கி 'அன்பர்களே! அதிதீவிரதர பக்குவிபாகிய இவ்வன்பனை இன்றிரவிலேயே ஆட்கொள்ளுவேம். மற்றவர்கட்குப்போல் இவன் விஷயத்தில் காலம் கரு முதலியவை வேண்டற்பாலனவல்ல' என்று திருவாய் மலர்ந்தருளினார். பின்பு அவ்வாசாரியர் குறிப்பிட்டபடியே பிரமராயருக்குத் தீக்ஷைபுரிவாராகிக் குருந்த விருக்ஷத்தின் நீழலில்தாம் ஒரு அழகிய ஆசனத்தின் மீது தெற்குநோக்கி வீற்றிருந்துகொண்டு பக்குவியாகிய பிரமராயரை எதிரிருத்தி மந்திராத்துவா முதலிய அத்துவாக்களைச் சோதனைசெய்து அவற்றை வேறுபடுத்தித் தமது திருநோக்கத்தான் அவரது அறிவினை மறைத்திருந்த மலஞ்சிதையுமாறு நோக்கி அஸ்தமஸ்தக சம்யோகஞ்செய்து அவரது மாயாமலத்தையும் கன்மமலத்தையும் போக்கி அழகிய வஸ்திரத்தால் மூடி அவர்க்குச் சூக்ஷுமபஞ்சாக்ஷரோபதேசஞ்செய்து அவரதுயிரைத் தாமாகும்வண்ணம் பாவனையிற்றி உளத்தொடு முயிரைவவ்விப் பிரமநாடிவழியாகப்போய்த் துவாதசாந்தத்தின் மேலாக இரண்டற்ற ஆனந்தம் அனுபவிக்கும்படி செலுத்தி அவரைக் குற்றமற்ற தமவடிவமேயாக்கி அவரது உடல் பொருளாவி மூன்றையுந் தத்தமாகப் பெற்றுக்கொண்டு அவரைநோக்கி 'அன்பனே பாதபூசையியற்றுவாயாக' என்றாக்கியாபித்தார். அவர் கழுநீர்மலர், சந்தனம், கஸ்தூரி முதலியவைகளைக்கொண்டு அன்போடு ஆசாரியரது திருவடிகளிற் பூசைபுரிந்து சாஷ

டாங்கமாக நமஸ்காரஞ்செய்து எழுநதாா. அப போது ஆசாரியா தமதனபராகிய பிரமராயரது முடி மிசைத் தமபாதஞ்சூட்டி அவரதுநுதலில தமது திருக கரத்தாலே வெண்ணீறு சாததிக கழுநீாமாலையும அவர்க்குசசூட்டிஞா ஆசாரியரது திருவடிமிசைச சூட்டிய மலர்மாலையினைத் தமமுடிமிசைச சூட்டப் பெற்று விளங்குபவராகிய பிரமராயர் ஆன்மநாதரையும யோகாம்பிகைத்தாயாரையும அடிபணிநது ஞானமே வடிவாக அமர்ந்திருநதாா. பின் விடிந்தவுடனே அக்கினிதீர்த்தத்தின மூழ்கிச சிவசின்னங்களை அணி நதுகொணடு ஆன்மநாதரையும யோகாம்பிகைததாயை யும அடிபணிநது ஆசாரியரையடைநது அவரது திருவடிகளில் அட்டாஙகமும நிலநதோய வீழ்நதெழு நது நின்ருர். உடனே அவ்வாசாரியா பிரமராயரைத தமமெதிரே இருததி அவாகரததே சிவஞானபோதம் என்னும் நூலைததநது அதின அடங்கிய பொருளகளை அவர்க்கு உபதேசிததருளிஞா. உடனே பிரமராயர் எழுநது பரவசராகித தம ஆசாரியரது அடியிடததே தமமுடிபடுமாறு வீழ்ந்து வணங்கி எழுநது "தேனும பாலும தீஙகன்னலும அமுதுமாய்த திததிதது ஊனும உருக்கும" தகைத்தாகிய இனியபாமாலைகளைச சூட்டுவாராயிஞா. *

---

* அககருத்துககள் அமைத்து மகாவிததுவான் மீனுட்சி சுந்தரமபிள்ளையவர்கள இயறறிய கவிகள் மிகமாதுரியமாயிருக கினறன. அவைவருமாறு:—

அதுகேட்ட ஆசிரியர் அகமிகமகிழ்ந்து அப்பாக் களின் மொழிகளெல்லாம் மணிபோன்று விளங்குதல்

தொழுபவ ரொருபாற் றுதிப்பவ ரொருபாற்
றுதித்துள நெக்குநெக் குருகி
யழுபவ ரொருபா லிவரெலா நிற்க
வடியனேன் றனைப்பிடித் தாண்டாய்
பழுதினின் கருணைத் திறத்தையென் புகல்கோ
பாண்டிநா டியற்றிய தவத்தாற்
கொழுமலர்ச் சோலைத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே (1)
உள்ளுந்தோ றிழிவை யுள்ளுப் பவஞ்செய்த்
துழிஇரூஉ வொதுங்கிய வெனக்கும்
அள்ளுந்தோ றன்பூ றுகக்கையொன் றருளி
யாண்டுகொண் டனையிது தகுமே
விள்ளுந்தோ றப்பா லாயப்பொலிந் தோங்கும்
விமலனே விமலமார் சிந்தை
கொள்ளுந்தோ றுவக்குந் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே (2)
வழிவழி யடிமை யுவந்திலேன் மலடு
மலர்க்கரங் கன்றிடக் கறந்து
கழிதுய ரடைந்து கிடக்கின்ற வெனையுங்
கண்டுகொண் டாண்டதெத் திறமோ
மொழிதடு மாற நெஞ்சநெக் குருக
முனிவறத் தொடர்பவர் முதலே
கொழிமலர்ப் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே (3)
எலவே யொருப்பட் டெற்றைக்கும் பாழுக்
கிறைத்தொரு பயனுமில் லேனைச்
சீலமார் முனிவர் திருக்குழாத் தோடுஞ்
சேர்த்துநீ யாண்டது தகுமே

பற்றித் தமது அன்பராகிய பிரமராயர்க்கு மாணிக்க வாசகர் என்று தீக்ஷாநாமம் கொடுத்தருளினர். இது

---

காலகா லாகங் காளவே தாள
கணம்புடை சூழ்தர நடிப்பாய்
கோலமார் செல்வத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே. (4)

கனிவிள விருக்கக் காய்கவர்ந் துண்ட
கள்வனு மென்னையும் பற்றி
முனிவரு முனிவர் கூட்டத்து ளொருசார்
முனிவறக் கூடுமா றளித்தாய்
புனிதமென் கனியே புந்தியூ றமுதே
பொங்குமா னந்தவான் பெருக்கே
குனிகொடி மாடத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே (5)

சுவைபடு மவனீதந் துமியுணுங் கொள்ளுந்
தொழுத்தையேன் றனைவலிந் திழுத்து
நவையிலா னந்த வமுதமூட் டினையா
னகைவிளைத் திடுபடி யேற்குங்
கவையழ லடைந்த மெழுகென வுருக்கக்
கற்றநற் றவருளத் துணையே
குவைமலர்ப் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே. (6)

திருநெடு மாலன் றொருநெடு மாவாய்த்
திணிபுவி பாதல மிடப்புற
றொருவற முயன்றுங் காணரு மலர்த்தா
ளுத்தையேன் றலைக்கெளி தாமோ

காறும் பாண்டியன் கட்டளையிட்டபடி பிரமராயர் என

வருமணி விளக்கே யானந்தப் பிழம்பே
யளிகனிந் தெழுசுவைக் கனியே
குருமணி மாடத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள பரனே (7)

அண்டரு முனிவர் கணங்களு மறறை
யவாகளு நறுமுறுப் படைய
வண்டரு மலர்த்தா ளென்கருந் தலைக்கு
மணிமுடி யாயதற புதமே
பண்டரு மொழியாள பஙகவோ மேலாம்
பரமவோ பரவியெழு ஞானறுங
கொண்டலின முழவார் திருப்பெருந துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே. (8)

என்னைநா னறியே,னையகோ பகலோ
டிரவெனப் படுவது மறியேன்
முன்னைநான செயத தவமெவ னென்னை
முழுமதோன மத்தனுக கினியா
லன்னையே யப்பா வொபபிலா மணியே
யடியவாக கெயப்பினில வைப்பே
கொனனைமா மதில்சூழ் திருப்பெருந துறையிற்
குருநதடி யிருநதருள் பரனே. (9)

செமமையொன் றிலலாச் சிறியனேன் கவலை
தீர்தர யோகநா யகியா
மம்மையோ டெழுந்து வநதினி தாண்டா
யானமநா யகவதற் கடியே
னிமமையே செயுங்கைம் மாறெவன் மறுமை
யேனுமொன் றிலலையென் செய்கோ
கொம்மைமா மதில்சூழ் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே. (10)

வழங்கிவந்த நாம் இனிப் பரமாசாரியரது அனுக்கிரகத்தின்படி நமது ஸ்வாமிகளை மாணிக்கவாசகர் என்ற பெயராலேயே வழங்குவோமாக. ஆசாரியர் தம்பாக் களைக் கேட்டுமகிழ்ந்து மாணிக்கவாசகர் எனப்போ தந்ததைக்கண்ட மாணிக்கவாசகர் மீண்டும் மீண்டும் அவ்வாசிரியரது அடிமிசை வணங்கி எழுந்துநின்று 'பெருமானே! அடியேன் இதுகொள்ளுந் தரத்தனோ? குதிரைக்கிடுந்தவிசை நாய்க்கிட்டதுபோல விருக்கின்றதே. கடையேனிடத்தில் எக்குணங்கண்டோ அடிகள் இப்பெரும்பேறளித்தது' என்று வியந்தார்.

"அதுசெவி யேற்று நெஞ்சநெக் குருகி
யடிக்கடி தாணமிசைப் பணிந்தே
இதுபெறுந் தரத்த னோவடி நாயே
னெரிமணிப் பொலன்றவி சொன்று
கதுமென ஞமலிக் கிடுவது மியல்போ
கடையன்பா லெக்குணங் கண்டாய்
மதுமலர்க் கழுநீர் மாலிகைத் தடந்தோள்
வள்ளலே எனப்பணிந் தெழுந்தார்."

பின்னும் தம்மாசாரியரது திருமுகநோக்கிப் 'பெருமானே! அடியேன்கொணர்ந்த பொருள்களையெல்லாம் தேவரீரது திருப்பணிகளிற் செலவிடுமாறு அருள்புரிய வேண்டும்' என்று பிரார்த்தித்து அனுக்கிரகம்பெற்றுக்கொண்டு வெளியேவந்து திருப்பணிசெய்யவல்லாரைக்கூவித் தாம்கொண்டுவந்த பொருளை யவர்க்கு வாரியிறைத்துச் சிவாலயத்தைப்புதுக்குவித்தார்; சிவதீர்த்தங்கட்குப்படியமைப்பித்தார்; திருப்பெருந்துறை

முாநூறறு வேதியாகளுக திருமனே கட்டுவித்தாா; சைவமுனிவாகள தஙகுதறகுத திருமடஙகடடுவித தாா; ஆலயததே தொணடுபுரியும தொண்டாகட்கு உறையுளமைப்பிததாா; பெருமானுடைய பூசைககு உதவும பொருட்டு திருநநதவனஙகள வைபபிததாா; பெருமானுடைய நித்தியநைமிததிகஙகளகுறைவுறாது நடைபெறுமபொருடடுவிளேநிலங்களேவாங்கிநலகினுர். எஞசிய பொருளேத திருவாலயததுள்ள கருவூலததே சேமிததுவைததுவிடடுத தாம சிவயோகததே அமாந துவிடடாா. இவவாறு அரசனுடைய பொருளேயெல லாம செலவிட்டமையை மதுரையினினறு அவருடன வநதவாகளாகிய பரிசனஙகளகண்டு அநதோ! இவா என்ன காரியம செயதுவிட்டனா! வேநதன் விஷய மலலவா? கொண்டகுதிரை எஙகேயென்று பாணடி யன் கேட்டால இவா எனனசொல்லுவாா? எலலாந தெரிநத இவரே இவ்வாறுசெயதால இனி மனுநீதிப படி நடபபோா யாா? எனறு வருநதி மாணிகசவாச கரை அடைநது அவரைவணஙகி 'ஸவாமீ வேநதன பொருளே இவவிதமாகச்செலவழிததுவிடடீரே இனிக குதிரை கொளளுவதெவ்வா' றெனறாகள. அவாகள் தாஙகள உரைததவைதானறும மாணிககவாசகர் உண ராமைகணடு இனிஉரைபபதிற பயனிலலே எனறு தங் கள இருககையடைநது நாம இதனே உடனே வேநத னுககறிவியாவிடிற குறறம நமதாகும எனறு தீாமா னிததுப் 'பிரமராயர் (அவாகடகு ஸ்வாமிகள மாணிக்க வாசகா என்று படடம பெறறமைதெரியாது) குதிரை வாங்கக கொணடுவநத பொருளே யெலலாம பலவாறு

சிவதருமங்களிற் செலவழித்துவிட்டார்' என்று பாண் டியனுக்குத் திருமுகமவிடுத்தார்கள். அரசன அதைக் கண்டதும அதிககோபமுடையவனுக 'உடனே குதி ரைகளாவது, கொணடுபோன பணமாவது கொணாந் தொப்புவிகக' எனறு மாணிக்கவாசகர்க்குத் திருமுகம விடுத்தான

"வழுதியர் பெருமா னெழுதிய முடஙகல்
வாதவூ ரமைசசர்கண காணக
முழுநிதிக குவையோ டெயதினீர அதறகு
மொயபரி கொணடினீ ரெனிலச
செழுவயப பரியோ டெயதலா மினறேற
செமபொனோ டெயதலா மொனறு
தழுவலீ ரெனினமேல வருவது நுமககுச
சாறறவும வேணடுமோ கொலலோ"

அதுபெறற அமைசசர்பிரான உடனே பெருமானது சந்நிதியடைநது முனனே சவுந்தரசாமநதகன்,

" .. வளளலே யாச ஞந்த [டாயே
குனறுறழ் நிதிய மெலலாங் கொணடெனைப் பணிகொண
வனறிறற சேனை யீடடும வணணம யாது?"

என்றதுபோலப 'பெருமானே' நான கொணடுவநத பொருளையெலலாம யான வேணடியவாறே தேவரீ ரது திருவாலயத்தும அடியாரிடத்தும செலுத்தும நெறியளித தருளினீர. பாணடியனுக்குப் பரிமாக கொணடுபோகும வழியென்ன?' எனறார.

"எனனு யகனே பொனனுட
ரேறே யேறு கொடியுயாதத
மன்னு தெனனு பெருநதுறையெம
மணியே வழுதி பொருளெலலா

நின்னு லயத்து நின்னடியா ரிடத்துஞ்
செலுதது நெறியளித்தாய்
பின்னு னவனுக கென்கொணடு
பரிமாச செலுததப் பெறுமாறே"

உடனே 'அன்பனே' ஒன்றுக்கும அஞ்சாதே. ஆவணி மூலத்தே அருமபரிகொண்டடைவோம. நீமுன்னே மதுரைக்குசசெனறு பாண்டியனையடைநது குதிரைகள் ஆவணிமூலத்தன்று வருமென்றுசொல்லு' என்று ஓர் சப்தமுண்டாயிறறு. அதுகேட்டலும மாணிக்கவாசகர் எமபெருமானைப் பணிநது புறவிடைகொண்டு புறப் பட்டுப் பரிசனங்கள் சூழ்நதுவர மதுரை யடைந்து அரணமனையினுட் போய்ப் பாண்டியனைக கண்டனர். பாண்டியன் தனது மந்திரியாரைக்கணடு மனமிகமகிழ் நது 'குதிரைகள் வருகின்றனவா ? பணமகொண்டுவந் தீரா" என்றான். அதற்கு மாணிக்கவாசகர் 'கொண்டு போன திரவியமெலலாம குதிரைகொண்டு வருவாரக கே கொடுத்திருக்கின்றேன. குதிரைகள் ஆவணிமூலத் தன்று இங்கேவரு' மெனறார். பாண்டியன் அது கேட்டு மகிழ்நது மநதிரியாரை உபசரித்தனுப்பினான். மாணிக்கவாசகர் அரசனிடம விடைபெற்றுப் புறப் பட்டுத் திருவாலயத்தையடைநது சுநதரேசுவரரையும, மீனாக்ஷியமமையாரையும அடிபணிநது புறபபட்டுத் தமது திருமனையடைந்தார. இவர் அரசது பொருளை யெலலாம பலவாறு தாமம் செய்துவிட்டார என்ற செய்தி கேடடிருநத சுற்றத்தாரெல்லாம் ஒன்றாகத திரணடுவநது 'ஐயரே' நீசெய்வ தொன்றும் நன் றாகவில்லை. மநதிரிதொழிலை மேற்கொண்டு அரச

ணிடத்தே எவ்வுரிவது பிராமணத்தாமமே யல்ல.
அதைமீறி அவ்வழியில் நின்றால் அரசனுடைய நோக்
கம் எப்படியோ அப்படித்தான் நடக்கவேண்டும். இது
தானே அல்லவா முறை. அரசியல், அமைச்சு நீதி
ஆகிய எல்லாவற்றையும் செவ்வையாக அறிந்த
உமக்கு நாங்கள் சொல்லக்கூடியது என்ன இருக்கின்
றது. உமது பந்துக்களையும் மித்திரர்களையும் ரக்ஷிக்க
வேண்டும் என்னும் குறிப்பு உமக்கு இல்லைபோல
இருக்கின்றது. ஆவணிமூலத்தே புரவிகள் வருமென்று
உரைத்தீரே, அந்தநாளில் என்ன சொல்லுவீர். உம
முடையசெயல் உமக்கே அழகாக இருக்கிறதா' என்று
"இடி மழை வாயவிட்டாற்" போலப் புத்தி கூறினார்
கள். அதுகேட்டு மாணிக்கவாசகர் 'நான் பெருமா
னுக்கு ஆட்பட்டபோதே சுற்றமும் தொடர்பும் நீத்
தேன். எனக்கு இன்பதுன்பங்கள் இரண்டும் சரியே.
தேகாபிமானத்தைத் தொலைத்துவிட்டேன். எனக்
குத் தந்தை, தாய், குரு, ஆசான் எல்லாம் சங்கரனே
சிவனடியார்கள் தாம் என் சுற்றத்தவர்கள். பிறவி
கள் ஏழுந்தான் எனக்குப் பகை. ஊரில் உள்ளவீடு
களில் சமைத்திருக்கும் சோறெல்லாம் என்னுடை
யதே; எங்கே வேண்டுமென்றாலும் இரந்துண்பேன்.
கடல்சூழ்ந்த இந்நிலவுலக மெல்லாம் நான் படுக்கும்
பாயல்; எங்கேவேண்டுமென்றாலும் படுத்துக்கொள்ளு
வேன். எனக்கு வேண்டிய ஆடை பீற்றற்கோவணந்
தான்; பீதாம்பராதிகள் வேண்டுமென்பதில்லை. பன்ம
ருத்திராக்ஷங்கள்தான் எனக்குச் சந்தனபூஷணங்கள்
இறப்பு இன்று வரினும் எனக்குச் சம்மதமே, அல்லது

என்றும் இருக்கநேரினும அதுவும் சமமதமே. பாண்டியன தணடித்தாலும தண்டிக்கடடும. உடனே உவகை ஊடடினும ஊடடடடும. பெருமான் எனக்கு சொரககலோக இனபங் கூடடினுங கூடடடடும; அலலது எரிவாய் நிரயத்தினிடததே செலுத்தினும செலுததட்டும. ஆனால இவறறுள எது நேரினும எம் பெருமானைமடடும மறவேன. நமமுடைய காமானுபவததை மாறறுவாா யாா. அனுபவித்துத் தானே அவற்றைக கழிககவேண்டும' என்று கூறிவிட்டாா.

ஆவணிமூலததுக்கு முனனுள அநதியமவரை புரவிகள் வாராமையைககணடு ஒருவன பாணடியனிடததேபோய 'அரச' பிரமராயர் கொண்டுபோன பணத்தை விரயம செயதுவிடடு வநதாா. குதிரை வாஙகவிலலை எனபது ஜகதபிரசிததமாக இருக்கினறதே. அவா வாாததையை நமபி யிருககலாமா? பொருள் வருமவழியைபபாா' எனறுன. அதுகேட்ட பாண்டியன தனபரிசனஙகள சிலரைவிடுதது மாணிக்கவாசகரைபபிடித்துவரசசொலலி அவரைச சிறைபபடுததி உபததிரவித்துப பணமவாஙகுமபடி தன் ஏவலாளாகடகுககடடளையிடடான. அவாகளும அதுசெய்தார்கள். மாணிககவாசகர் மனமவருநதிப் பெருமானைத் தோததிரிததாா. உடனே பெருமான் காடடகததே யுளள நரிகளையெலலாம உயாநத பரிகளாககித தமது கணஙகளைக குதிரைமவளாாகளாககித தமமுடன வருமபடி அழைததுககொண்டு தாம அவாகளுககெலலாந தலைவராக ஒா அருமபுரவிமேறகொணடு ஆவணி

மூலத்தன்று மதுரையடைந்தனர். தனது மந்திரியார் முன் குறிப்பிட்டபடி குதிரைத்திரள் வந்தமையறிந்த பாண்டியன் இவரையடைந்து 'அமாத்தியர் தலைவ! நான் ஆயாது அவசரப்பட்டு உம்மை உபத்திரவித்ததை மன்னியும்' என்றுகூறி உபசரித்து தழைத்துக்கொண்டு அக்குதிரைகளைக் காணச்சென்றான். அங்கே குதிரை மள்ளரது தலைவர் பாண்டியனுக்குத்தாம் கொண்டு வந்திருக்கும் குதிரைகளின் லக்ஷணம் முதலியவற்றை விவரித்து 'அரச! நீ செய்யவேண்டிய சோதனையெல்லாம் இன்றே செய்துகொள். கயிறு மாறியாயின் பின் ஒன்றுங்கூடாது அப்புறம் குதிரை உன்னுடையது. பணம் எங்களுடையது இது எங்கள் வியாபார முறை' என்றனர். அது கேட்ட பாண்டியன் அக்குதிரைகள் சூரியனது அஸ்வலக்ஷண நூலிற் கூறியவாறு எல்லா லக்ஷணங்களும் கொண்டிருக்கக்கண்டு மகிழ்ந்து கயிறுமாறிக்கொடுக்கப்பெற்றான். பரிசனங்கள் அவற்றைக்கொண்டுபோய் லாயத்தே சேர்த்தார்கள்.

பின்பு பெருமான், மாணிக்கவாசகர் முன்னிலையாகப் பாண்டியனுக்கு அன்பளித்தல் கருதியோ அல்லது வந்தி என்னும் பிட்டுக்காரிக்கு அருள்செய்வது கருதியோ அக்குதிரைகளெல்லாம் அன்றிரவே பழயபடி நரிகளாகக் கழியுமாறு திருவுள்ளங்கொண்டார். அன்று பகலில் தான் வாங்கிய குதிரைகளெல்லாம் அன்றிரவே நரிகளாக முன்னே லாயத்திருந்த குதிரைகளையும் கடித்தெறிந்து விட்டோடினவென்று பாண்டியன் கேட்டு அதிக கோபமுடையவனாகித்தன் ஏவலாளரை நோக்கி 'அந்த எத்தனைப்பிடித்து வந்து

மஹாமஹோபாத்யாய, டாக்

உபத்திரவித்துப் பணத்தை வாங்குங்கள்' என்று கஇ யாபித்தான. அவாகள அவ்வாறே போய் மாணிக்க வாசகரைப்பிடித் துபத்திரவித்தாாகள். அவா வருந திபெருமானை ஸ்தோத்திரம செய்தாா. பெருமான் உடனே வையைநதி பிரவாகிக்குமாறு செயதனா. வையை பெருகெடுத்து வெள்ளநீா நகரெலா நிரம்பு தலகண்ட பாணடியன தனது மநதிரிமாாகளைககூவி ஊரவாகளையெலலாம வீடடுககோராள் வீதம அனுப் பசசெயது இனறு அததமிககுமுன அணைகட்டி இவ் வெள்ளநீரைத தடைசெயவியுஙகள எனறு கடடளை யிடடான தமமைசசிறைபபடுத்தி உபத்திரவிததுக கொண்டிருநதவாகள அநத வெள்ளநீாக கலககததில தமமை விடடகனறாகளாக மாணிக்கவாசகா சிவால யத்தையடைநது எமபெருமானைத் தியானிததுககொ ணடு சிவயோகததிலே அமாநதிருநதாா. அரசன கட் டளைபபடியே மநதிாிாள அவவூாக குடிகளெவ்வொ ருவரும வீட்டிறகொவ்வோா ஆள்வீதம அணைகட்டுத லுககாக அனுபபவேணடுமெனறு பறைசாற்றுவித் தாாகள எலலாருடைய வீடடினின்றும அவ்வாறே ஆளகள வநது அணைகட்டுதலில வேலை செய்தார்கள். அவ்வூரில ஆருமறறு அனாதையாக இருநத பகதியிற் சிறநத வநதியெனனும பிடடுககாாிமட்டும தன் பஙு குக்கு ஆளனுபபுதறகிலலாமல அதிக வருத்தமடைந தாள அப்பொழுது ஆனநத பெருமான ஓர் கூலியாளாக வநது அவள் கொடுப்பதாகசசொலலிய பிட்டுககூலிக் கிசைநது மண்சுமநதாா. குறிததகாலததில எல்லாரு டைய பஙகும அடைபட்டிருககவும தமமைக்கூலிக்கு

நியமித்த அம்புவின (வந்தி) பங்குமட்டும அடைபடா மலிருககககணடு பாணடியன கோபிததுததமமை அடிககப பெருமான, தம கையிலிருநத ஒரு கூடை மணணை உடைபபிறகொடடி மறைநதனா:. உடனே கரையானது மலைபோலுயாநது உடைபபடைபடடது. பெருமானமுதுகிறபடட அடி அடிததபாணடியன முதுகிறபடடது. அணடையிலிருநத மநதிரி பிரதானி

---

[' இததிருவிளையாடலகளைக கீாததிததிருவாகவலில,

' அரியொடு பிரமற களவறி யாதவன
நரியைக குதிரை யாககிய நனமையும
மதுரைப பெருநன மாநக ரிருநது
குதிரைச சேவக னாகிய கொளகையும
ஆஙகது தனனி லடியவட காகப
பாஙகாய மணசுமந தருளிய பரிசும "

என்றவரிகளும, திருபபாணடிபபதிககததில,

[ஞேங

" சதுரை மறநதறி மாலகொளவர் சாாநதவா சாற்றிசசொன
கதிரை மறைததனன சோதி கழுககடை கைபபிடிசதுக
குதிரையின மேலவநது கூடிடு மேறகுடி கேடுகணடீா
மதுரையா மனனன மறுபிறப போட மறிததிடுமே "

என்ற திருப்பாசுரமும, திருவமமானையில,

"பண்சுமநத பாடற பரிசு படைததருளும்
பெண்சுமநத பாகததன பெமமான பெருநதுறையான
விணசுமநத கீாத்தி வியனமண டலததீசன
கண்சுமநத நெற்றிக கடவுள கலிமதுரை
மண்சுமந்து கூலிகொணடக கோவான மொததுண்டு
புண்சுமநத பொன்மேனி பாடுதுஙகா ணமமானாய்."

என்றதிருப்பாசுரமுமாகிய திருவாசகஙகளாலறியலாம.]

முதலிய பரிசனங்களின் முதுகுகளிற்பட்டது உலகத் தேயுள்ள எல்லா உயிர்களின்மீதும் பட்டது. அம்புவா னவள் விமானத்தின் மீதாரந்து கைலாசம் சென்றாள். தான் அடித்த அடி தன் முதுகினும் சூழ இருந்தவர்கள் முதுகுகளினும் பட்டதும், அனேகங்கூடை மண்கொட் டினும் அடைபடாதகரை ஒரு கூடை மண்ணால் அடை பட்டதும், அம்புவானவள் விமானமூரந்து செல்லுத லும் ஆகிய இவற்றையெல்லாம் பாண்டியன் பார்த்துக் கலங்கினன். உடனே பெருமான 'அரச' வாதவூரமைச் சன உன பொருளை யெல்லாம் நமக்கும் நமமடியார்க்கு மே உபகரித்து அளவில்லாத புண்ணியத்தை உனக்கு ஈட்டித்தந்தான். எபபொருளினும் பற்றெனபது சிறி தும் இல்லாதவன் அவனை உபத்திரவித்தாய. அதற்கா கக் காட்டகத்தேயுள்ள நரித்திரளையெல்லாம் பரித் திரளாக்கிக் கொணடுவந்து கொடுத்தோம். உன் பொ ருளுக் கேறபக் குதிரைகளைக் கயிறு மாறித்தரப்பெற றுசசென றும பினனும அவவமைசசனை உபத்திரவித் தாய. ஆதலால வையை பெருக்கிடப் பார்த்தேம். எமமிடத்தே அனபுடைய அம்புவை நமமுலகடையச் செயதோம. இனி அவ்வமைசசனை அவன சித்தத் தினபடி செலலுமாறு விட்டுவிடு' என்று ஆகாயவாணி யால் உரைத்தருளினா. அதுகேட்டுப் பாண்டியன் 'அநதோ! என்செயதோம்!' என்று பெரிதுளம்வருந் தித் தனது அமைசசரைத்தேடி அடிபணிந்து 'ஐயரே! அடியேன் அறியாமையினால் தேவரீர்க்குச் செய்த பிழைகளை க்ஷமித்தருளி இத்தேசத்தின் ஆட்சியைக் கைக்கொண்டு எம்குடிமுழுது மாண்டருளவேண்டும்'

என்று பிரார்த்தித்தான். அதுகேட்ட மாணிக்கவாசகர் 'மன்னா மன்ன! நான உமமைச சாரநதகாரணத்தினாலேயே பகவானுடைய திருவருளுக்குப் பாத்திரனானேன. நீ எனககுச செய்தபிழை யொனறுமிலலை' எனறுரைததுப பிறஉடைகளையெலலாம் நீததுவிட்டுக கவுபீனதாரியாகப் புறபபட்டார. பாண்டியன் தொழுது மீண்டு சிவாலயததடைநது, பெருமான் சநநிதியிறபோய நின்று, 'உலகமெலலாமுடைய பெருமானே! திருமுடியிலே அடையாளமபடுமபடியாக ஒருவனடிததவிறறழுமபும ஓரொப்பறற தொணடன் எறிநத கலலும போல அடியேன வெகுணடிதத கைப்பிரமபி னடியையும தேவரீரதருமைததிருமேனி தாங்கியதோ? தேவரீரது முதுகைநோககி நானடிகக உலகததுள்ள எலலாமீதும படடஅடி என முதுகினும படடதே! அடியேனும தேவரீரககுத திருமேனியாயினேனோ? அமைசசர் பெருமானைத தேவரீரது தொணடரெனறறியாது உபததிரவிததுவிட்டேனே! மாயாவிருததியினுன மயங்கி அருநதவரை ஆயாது வருததிய நான அருநரகில வீழநதழியாதபடி அப்பெரியோருடைய தனமையெலலாம அடியேனுககுத் தெளிவிதத தயாநிதியே! தேவரீரது பெருங்கருணைக்குக கைமமாறு யாதுளது? தததவஞானமுடையோாகள வேதவிதிபபடி செய்யும யாகததிடை தேவரீரக்கூடடும அவிசினும பார்கக இவ்வந்தியிடும பிடடுக்கழி சுவையுடையதோ? சவுந்தரபாணடியனு யிருநதுலக முழுதும ஆணடபெருமானே! தாயிலலாததேவரீரககு இவள் ஒரு தாயஆயினளோ? நரிகளையெலலாம பரிக

ளாங்கித் தேவரீரே எழுந்தருளி யிருக்கவும் அவ்வருமைத் திருமேனியை, அது அடைந்தாரது பாசநீக்கி ஆட்கொள்ளுந் திருவுருவம் என்றறிந்துய்யாது பரியாசை பிடித்தலைந்தேனே! அன்னையொத்த பெருமானே! அடியேன் அறியாமை மீதூர்ந்து இயற்றிய பிழைகளை யெல்லாம் பொறுத்தாட்கொள்க' எனப் பலவாறு துதித்து வணங்கிப்புறவிடைகொண்டு அரண்மனையடைந்தனர்.

எல்லாருங்காணத் துறவுகொண் டெழுந்தவராகிய மாணிக்கவாசகர் சுந்தரேசுவரரையும் மீனாக்ஷித் தாயாரையும் வணங்கிப் புறப்பட்டுத் திருப்பெருந்துறை யடைந்து குருந்த நிழலில் எழுந்தருளிய ஆசாரியரைத் தேடினார். அங்கே அவரும் அடியவர்களும் இல்லா திருப்பதுகண்டு, அவ்விடம் விட்டுப் பிரிந்தார்கள் என்றுணர்ந்து ஐயகோ என்றழுதரற்றினார். அவனி யிடையே வீழ்ந்தார், மீண்டும் எழுந்தார்

"மண்ணுதி யாரூறு மனந்துழாவித் தடுமாறிப்
புண்ணாகி யென்னைக்காணு தழலகின்றேனைப் போதவருட்
கண்ணுலவை முழுதுங் கரைய நோக்கி யானயானென்ன
றெண்ணு வென்னைத்தந்தா யெங்குற் றாயோ வெந்தாயே"

"மாசாய மறைக்கும்மல வலியும் நானும் வேறின்றி
யாசாவி காரமல மாயினேனைப் பொருட்படுத்திப்
பேசாத வின்புருவி னின்றோ டென்னைப் பின்வைத்த
வீசா வென்னையிங்கிட் டெங்குற் றாயோ வெந்தாயே"

என்று பலவாறுகூறி யிரங்கினார். பின், படிப்போர் "கருங்கன் மனமுங்கரைக்"குந்தன்மைத்தாகிய வாசகம்

வகுப்பாராகி "நமச்சிவாய வாழ்க' என்றெடுத்து ஈரா தமக்கியல்பான திருநாமம் வாழ்கவென வாழ்த்தினார். அதன்பின் அற்புதப்பத்து, அதிசயப்பத்து, குழைத்த பத்து, சென்னிப்பத்து, ஆசைப்பத்து, வாழாப்பத்து, அடைக்கலப்பத்து, செத்திலாப்பத்து, புணர்ச்சிப்பத்து, அருட்பத்து, திருவார்த்தை, எண்ணப்பதிகம் திருப்பள்ளியெழுச்சியாதி பலவும் பாடியுருகினார். உடனே பெருமான் அடியார்கூட்டமுடை சூழ இடபவாகனரூடராக விசும்பிடையே எழுந்தருளிச் சிவாக்கினி உண்டாகுமா செய்து, அதனிடையே அடியவர்களைப் புகுமாறு கடைக்கணித்தருளினார். அவர்கள் அவ்வாறே புகுந்து சிவகணங்களாக அமர்ந்தார்கள். பின்பு மாணிக்கவாசகரை நோக்கி 'அன்பனே' தில்லைக்குவா' என்றுரைத்து மறைந்தருளினார். அதுகண்ட மாணிக்கவாசகர் 'எம்பெருமான் என்னைத் தில்லைக்குவா என்று வைத்தருளினாரே, திருவுள்ளம் யாதோ' என்று இரங்கி "மெய்தானரும்பி" என்றெடுத்து விரைவாக ஒப்பற்ற திருச்சதகத்தைப் பாடிப் பெருமானைப் பணிந்து புறவிடை கொண்டு திருவுத்தரகோசமங்கையை யடைந்தார். அங்கே நமது சுவாமிகள் "கடையவனேனை" என்று தொடங்கி நீத்தல்விண்ணப்பம் அருளிச்செய்யப் பெருமான் மகிழ்ந்து குருந்தமாவடிவங்காட்டினாராக, அன்போடு பணிந்து புறப்பட்டுப் பாண்டியிலுள்ள பிறதலங்களையும் சேவித்துக்கொண்டு சோழநாட்டுள்ள திருவிடைமருதூர் * சென்று பெருமானைப்

* திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டதென்னைப்படுகின்ற திருவேசறவு என்னும் பதிகத்தா

பணிநது புறப்பட்டுத திருவாரூரடைநது திருப்புலம் பல் ஓதிப்பணிநது புறபபட்டுச சீகாழிஅடைநது பிடி ததபதது அருளிசசெயது பணிந்து அநநாட்டிலுள்ள பிறதலஙகளும சென்று தரிசிததுக்கொண்டு நடுநாட் டையடைநது திருவெண்ணெய்நல்லூராதிக்ஷேத்திரங களைத் தரிசிததுக்கொணடு திருவண்ணுமலையடைந தாா. அங்கே திருவெம்பாவை, திருவமமானை, என பவறறை யருளிசசெய்யப பெருமான மகிழ்நது தமது குருநதமா கோலஙகாட்டப் பணிந்து போறறிப் புறப பட்டுத தொண்டை நாட்டிலுளள காஞ்சி காளத்தியாதி க்ஷேததிரஙகளைத தரிசிததுககொணடு கழுக்குன்றை யடைநதாா. அங்கே பெருமான தமது குருநதமா கோலஙகாட்டக கணடு ஆனநத பரவசராயப் "பிணக கிலாத பெருநதுறைப பெருமான" என்று தொடங கிய திருககழுககுன்றபபதிகம அருளிசசெயது வண ஙகி, ஆண்டவா தமமைத தில்லைவாவென றுரககியா பிததது நினைநது உடனே புறப்பட்டுப பனமலையும காடுஙகடநது தில்லையடைநதாா. அஙகே யடைநது கணடவுடன கணடபதது அருளிசசெயது வணங கினா பினபு திருககுலாபபதது, கோயின்மூதத திருபபதிகம, கோயிறறிருபபதிகம, கீர்ததிததிருவக வல, திருவணடபபகுதி, போறறிததிருவகவல, திருப

---

'மருவினிய மலாபபாத மனததில்வளாந துளளுருகத
தெருவுதொறு மிகவலறிச சிவபெருமா னெனறேததிப
பருகியநின பரஙகருணைத தடஙகடலிற படிவாமா
றருளெனககிங கிடைமருதே யிடஙகொணட வமமானே'

எனற பாசுரங காணபபடுகினறது தனியாக வேறுதிருவாச கம காணபபடவிலலை

பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், திருக்கோத்தும்பி, அன்னைப்பத்து, குயிற்பத்து, அச்சப்பத்து, திருத்தசாங்கம் ஆகிய இவற்றைப்பாடிப் பெருமானது அனவரததாண்டவத்தை யானந்தத்தோடு தரிசித்துப் பணிந்துகொண்டு அத்தலத்தே ஓர் பர்ணசாலையியற்றி யதனிடத்தே யமர்ந்தினிதிருந்தருளினார்.

அக்காலத்தே தில்லைவனத்தைச் சார்ந்த தவசி யொருவர் ஈழநாட்டுக்குச்சென்றார். அவர் எப்போதும் 'திருவம்பலம் செம்பொன்னம்பலம்' என்றேசொல்லிக் கொண்டிருக்கும் தம்வழக்கப்படி அங்கேயும் 'திருவம்பலம்' என்றார். அந்நாட்டில் பௌத்தசமயம்பெருகி யிருந்தது. அந்நாட்டரசனும் பௌத்தன். அப்பௌத்தர்கள் இத்தவசி 'திருவம்பலம்' என்றுரைத்ததைக் கேட்டுத்தம் அரசனிடத்தே போய் 'அரசனே! இவ்வூ ரகத்துள்ளே ஒருத்தன் வந்திருக்கின்றான். அவன் சாம்பலைப்பூசி ருத்திராக்ஷங்களைப் போட்டுக் கொண்டிருக்கின்றான். வீடுதோறுஞ்சென்று பிச்சையெடுத்துண்ணுகின்றான். அவன் தான் நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் எப்போதும் 'செம்பொன்னம்பலம்' என்றவார்த்தையே சொல்லுகின்றான்' என்றார்கள்.

"ஒற்க மில்தி ருத்த னுமொ ருத்த னிங்க காக்குளான்
னற்க லங்க லக்கு மாலை நாளு முண்ப தையமே
நிற்கி னுமி ருக்கி னுங்கி லாவு செம்பொன் மன்றெனுஞ்
சொற்கி ளர்ந்து ரைக்கு மென்று சொல்லி முன்வ ணங்கினார்'

அதுகேட்ட மன்னவன் 'அவனை யிங்கழைமின்' என்றான். அவ்வாறே தூதர் சென்றழைக்க அத்தவசி 'நலந்தீது எதிலும் யாதொரு சம்பந்தமுமில்லை பிரசையெடுத்துண்பதொழிற்கொண்டு கருதாருடன் வேந்தனுக்கென்ன கருமமுண்டு' என்றார். 'பிரசையெடுத்துண்பாருயிரையும் போற்றுபவன் மன்னனாதலால் நீவருதல் வேண்டும்' என்று அத்தூதர் உரைக்க அத்தவசி உடனே எழுந்து அரசவையடைந்து 'பொன்னம்பலம்' என்றுகூறியுட்கார்ந்தார். அதைக்கண்டபவுத்தமன்னன் அத்தவசியை நோக்கி 'நீர் இப்போது பொன்னம்பலம் என்றுரைத்தகாரணம் யாது?' என்றான். அதற்குத் தவசியார் அரசனை நோக்கி 'அரசனே! புகழ்தங்கிய சோழநாட்டில் புலியூர் என்றொரு க்ஷேத்திரம் இருக்கின்றது. அது முன்னே தில்லைவனமாக இருந்தது. புவனத்திலுள்ள தலங்களிலெல்லாம் அதுவே பூர்வதலம்; மூலஸ்தானமாக விளங்கும் அத்திவ்ய க்ஷேத்திரத்திலே சிவபெருமான் அனவரதமும் ஆனந்தத்தாண்டவம் செய்தருளுவார். அங்கே மனுசக்கிரவர்த்தியின் புதல்வனாகிய இரணியவர்மசக்கிரவர்த்தியின் தேகத்தேயிருந்த குட்டநோயை நீக்கிய பொன்னிறமான திவ்ய தேகத்தைக்கொடுத்த சிவகங்கை என்னும் தீர்த்தமிருக்கின்றது. எவ்வகையினராயிருப்பினும் ஒருவர் அத்தீர்த்தத்தின் மூழ்கிப் பெருமானது பஞ்சகிருத்தியத் தாண்டவத்தைத் தரிசனம் பண்ணினால் அவர்க்கு முத்தி கிடைக்கும் என்பது நிச்சயம். தம்மையடைவார்க்கு முத்தி கொடுக்குந் தேவர் தாமே என்பதற்கறிகுறியாகப் பெருமான்

வீரக்கழலணிந்து அங்கே கொடியும் நாட்டித் தாண்ட
வம் புரிகின்றார். கொடிய பாபிகளாக வுள்ளவர்களுங்
கூட ஒருமுறை அன்போடு 'பொன்னம்பலம்' என்று
ரைப்பார்களாயின் அவர்கட்குச் சகலபாக்கியமுஞ் சித்
திக்கும். பொன்னம்பலமென்று ஒரு முறை சொன்
னால் அது மகாமந்திரமாகிய பஞ்சாக்ஷரத்தை இருபத்
தோராயிரத்தறுநூறு முறை செபித்தலுக்குச்சமம்.
ஆதலிற் சொன்னேன்' என்று கூறினார். அப்போது
அச்சபையிற் பிடகநூல் மூன்றுமறிந்து நான்கு குற்ற
மும் நீங்கிச் சீலமைந்துந் தரித்துக் காமாதியாறும் இந்
திரியங்களைந்தையும் அடக்கிய இயல்புடையவனாகிய
பஞ்சகந்தமுங் கெடுவதே முத்தியென்று காட்டும்
பவுத்தாசாரியன் உட்கார்ந்திருந்தான். அவன் அத்த
வசியின் வார்த்தையைக் கேட்டுப் பிடக மூன்றையும்
அருளிச்செய்த கடவுளையன்றியும் வேறே கடவுள் உல
கத்தே உண்டெனக்கூறலாமா எனக் கோபித்து 'யான்
இன்றே புறப்பட்டுத் தினமூன்றிற் றில்லை யடைந்து
அங்குள்ளாரோடு வாதிட்டு வென்று, அவர்கள் கடவு
ளின் காலிலுள்ள வீரக்கழலையும் அங்கே நாட்டியிருக்
கும் கொடியையும் துணித்து அத்தில்லையை நமது
போதிநிழற்கீழ் எழுந்தருளும் பெருமானது பள்ளி
யாகச்செய்து விரைவின் மீள்வேன்' என்று சபதங்
கூறித் தனது பரிசனங்கள் தன்னைச்சூழ்ந்துவரச் சிவி
கையேறிப் புறப்பட்டான். அவர்கள் மன்னனும் தனது
ஊமைப்பெண்ணையும் உடனழைத்துக்கொண்டு புறப்
பட்டுப் பவுத்தாசாரியனோடே சோழநாடடைந்து தில்
லையைச்சேர்ந்தான். இவர்கள் கூடி வந்திருத்தலைக்

கண்ட தில்லைவாழந்தணர் முதலியோர் திருநீறணி யாத அவர்கள் கோலத்தைக்கண்டஞ்சி 'நீங்கள் இந்த திவ்ய க்ஷேத்திரத்தே இருக்கலாகாது; நீங்குங்கள்' என்றார்கள். அதற்கு அப்பவுத்தாசாரியன் 'நாங்கள் உங்கள் சைவத்தை நிராகரணம் செய்து எங்கள் பவுத்தத்தை ஸ்தாபனஞ்செய்ய வந்திருக்கின்றோம். ஆதலால் அது செய்தபின்பல்லாது நீங்கோம்' என றான். அது கேட்ட தில்லைவாழந்தணர்கள் 'இன்றிங் கிரு; நாளை உன் மதத்தைத்திரஸ்காரம் பண்ணிவிடு கின்றோம்' என்று கூறி அதிக வியாகூலமுடையார்களா கத் தங்கள் மன்னனாகிய சோழனைத் தில்லைவந்து சேரு மாறு அவனுக்குத் தூதனுப்பிவிட்டுப் பகவானைத் தியானித்துக்கொண் டுறங்கச்சென்றார்கள். அன்றிர விலே பெருமான் அத்தில்லைவாழந்தணர்களெல்லோ ருடைய கனவிலுந்தோன்றி 'நீங்கள் நாளை இவ் வூர்க்கு வெளியே பாணசாலையில் யோகத்தமர்ந்திருக் கும் அன்பனிடம் போய் மாணிக்கவாசகா! என்று விளித்துப் புத்தரோடு வாது செய்யுமாறு யாம் கூறிய தாகச்சொல்லி, அழைத்து வாருங்கள் அவன் அவர் களை வெல்லுவான்' என்று திருவாய் மலர்ந்தருளினர். விடிந்தவுடனே அவ்வந்தணர்களெல்லாரும் ஒருங்கு கூடிப்பெருமானது திருவருளை வியந்து ஊர்க்கு வெளி யே இருக்கும் பாணசாலையை அடைந்து அன்பரை வணங்கி மாணிக்கவாசகரே' என்றழைத்துப் பெரு மான் கூறியதை விண்ணப்பித்தனர். தமக்குப்பெரு மான் மாணிக்கவாசகர் எனப் பேர்தந்தது தமக்கும் பெருமானுக்குமேயன்றி இவ்வுலகத்துள்ளார் ஒரு

வருக்குத் தெரியாதாதலினால் அவ்வாறு பவுத்தரோடு வாது புரிய வேண்டுமென்பது பெருமானது திருவுள்ளப்பாங்கே யெனவெண்ணித் திருவாலயத்தை யடைந்து பெருமானை வணங்கி யநுஜ்ஞைபெற்று வீற்றிருந்தார். இதற்குள்ளாகத் தில்லைவாழந்தணர்கள் விரும்பியபடி சோழராஜனும் வந்து சேர்ந்தான். பின் மாணிக்கவாசகர் சோழராஜன், ஈழராஜன், தில்லைவாழந்தணர் முதலியோர் முன்னிலையில் பவுத்தாசாரியனுடன் சாஸ்திரவாதம் செய்து வென்றார். அதுகண்ட ஈழராஜன் 'யான் இச்சாஸ்திர வெற்றியை ஏற்கேன். இருசமயத்தவர்களில் யார் என்மகளுடைய ஊமைத்தன்மையைப் போக்குவாரோ அவர் சமயமே மெய்ச்சமயமாக்கருதுவேன்' என்றான். அதைப்பவுத்தாசாரியனும் அவனைச்சார்ந்த பவுத்தர்களுங்கேட்டு அரசன் தம் சார்பைவிட்டகலாமை கருதித் தம் சமய நூல்களிற் கூறப்பட்ட பலவகை மந்திரங்களையும் ஜெபித்துப்பார்த்தார்கள்; ஒன்றும் பயன் படவில்லை. அதுகண்ட சோழன் எமது குருவால் இவ்வூமைத்தன்மை நீங்கினால் உங்களுக்கு என்ன தண்டனை செய்யலாம்? என்று கேட்டான். அதற்கவர்கள் 'அவ்வாறு அப்பெண்ணின் வாய் திறக்கப்படின் எங்களை யெல்லாம் செக்கிலிட்டுத் திரிக்கலாம்' என்றார்கள். உடனே சோழன் மாணிக்கவாசகர் திருமுன்பு சென்று 'ஸ்வாமீ' தேவரீர் இக்கன்னியின் ஊமைத்தன்மை தீர்த்துச் சத்தியமார்க்கமாகிய சைவத்தின் மேன்மையைத் தாபிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தான். மாணிக்கவாசகரும் அதற்கிசைந்து அப்பொற்றொடி மடந்தை

யின கரததிக திருநீறு கொடுததது, முன்னே அபபுத தனகூறிய நிநதைகளை யெலலாம முறையே வினவ அவறறுககெலலாம அபபெண்தொடி விடைகொடுத தாள. அதுகணடு எலலாருமே ஆனநதககடலிடை மூழ் கினாகள. நமது ஸ்வாமிகள அசசமபாஷணையைத தொகுதது வினவிடையாகத திருசசாழல அருளிச செயதாா. பவுததாகளை யெலலாம அவாகள முன னோநதவாறே சோழன தணடனை யியறறினன். அப பவுததருளளே சிலா தஙகள சீவரபபோாவையைத்தீ யிடை வீசிவிட்டுந திருநீறு தரித்துச சைவாகளாயி னாகள ஈழமனனனும சைவனாகி மாணிககவாசகரை யடிபணிநது பின் சிவதரிசனஞசெயது வணஙகிததன னுடுசேர்நதான. மறறவாகளுந தததமிட மடைந தாாகள. மாணிக்கவாசகர் திருபபடையாடசி, திருப படை எழுசசி, அசசோப்பதிகம, யாததிரைபபதது, இவறறையருளி முனபோலப பாணசாலை யடைநது பரஞசுடரைத தியானிததபடியே சிவயோகத தமாந திருநதாா. அமபலததாடுமே ஐயா ஒருநாள பிராமண கோலததுடன ஏடும எழுததாணியும கையில எடுத துககொணடு மாணிககவாசக சுவாமிகள இருககுமிடத தை அடைநதாா அவரை மாணிககவாசகா நோககி 'அநதணரே! நீா யாா?, என்று கேட்க, அவா நான பாண்டிய தேசததிலுளள திருப்பெருந்துறையில் வசிப போன' எனறாா. வநத காரிய மெனனவெனறு மா ணிககவாசகர் கேடக, அவா 'வாதவூா இறைவரே' நீா எமபெருமான மீது பாடியிருக்கும இனியபாடலகளை எழுதிககொணடு போக வேணடிவநதேன. தயை

செய்யவேண்டும' என்றா. அதுகேட்டு மாணிக்கவாச கா அகமிக மகிழ்நது "நமசசிவாயவாழ்க" என்று தொடங்கும் கலிவெணபாவை முதலாவது கூறித தமபாககஙாச சொலலிககொணடு வர வேதியககோ லஙகொண்ட பெருமான அவறறை எழுதிமுடி தது அவரை நோககி 'ஐயரே' தேவரீரது வாககுமிக இனிமையாக இருககினறது. அவவாக்கால ஸ்ரீ நட ராஜப்பெருமான மீது ஒரு கோவைசொலலவேணடு கின்றேன' என்றா. அதுகேட்டு மாணிக்கவாசகா மகிழநது சொலலிக கொணடுவர மறையோாகோலங் கொணட பெருமான அவறறை எழுதிமுடிதது இறுதி யில, 'மாணிக்கவாசகன் சொலல அமபலவாணன எழு தியது' என்று வரைநது அவ்வேட்டைக கட்டிக கொணடு உடனே மறைநதுபோனாா. அதுகணடு மா ணிக்கவாசகா பெருமானே இவ்வாறு செயதது? என்று மயஙகினா புத்தகததோடு மறைநத பெரு மானா அவ்வேடடுக்கு மைககாபபிட்டு அதனைப் பஞ சாட்சரபபடியின மீதிட்டாா. டாாதத தில்லைவாழந தணா முதலினோா அதனை எடுததவிழ்ததது நோககி ஆதிமுதறகொண டநதமவரைககும ஒரு முறை பாாதது, மாணிக்கவாசகன் சொலலச சிற்றமபலமு டையான எழுதிய தெனபதைபுஙகணடு ஈதெனன அறபுதமெனறஙகை யோநதித தலைமேறகொணடாா. அவாகட்குண்டாகிய மகிழ்சசியை யாரளககவலலாா? அவாகள் அவ்வேட்டைப பொற்சிவிகையின மீதேற றிபபலவகை வாததியஙகளு முழஙக மாணிக்கவாசகா் திருமுன்பிற போய் அவ்வேட்டை வைதது 'ஸ்வாமீ'

இது தேவரீருடைய பாடல். இதனை எழுதினர் எம்பெருமான்' என்று விண்ணப்பித்தார்கள். மாணிக்கவாசகரும் ஆனந்த பாஷ்பம்பெருக அதனைக்கண்டார். தில்லைவாழந்தணர்கள் 'இத்திருமுறையின் பொருளை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டு' மென்றார்கள். அதற்கு மாணிக்கவாசகர் 'அதனைநாம் திருச்சபையினிடத்தே வந்து சொல்வோம்' என்று புறப்பட்டுத் தில்லைவாழந்தணர் சூழ்ந்துவரச்சென்று திருச்சபையடைந்து 'இதோ பஞ்சகிருத்தியத்தாண்டவம் செய்தருளுகின்றாரே இவர்தான் இந்நூற்குப் பொருளாவா'ரென்றுரைத்துப் பெருமானுடன் கலந்தருளினார்.

இவ்வாறாக நமது திருவாதவூரடிகள் பெருமானது திருவடி நீழலடைந்தருளினார். அப்போது அவர்க்கு வயது முப்பத்திரண் டென்கின்றார்கள். ஸ்வாமிகள் அருளிச்செய்த திருவாசகம் போல ஓதுவார் மனத்தை உருகக் வல்லது வேறொன்றிருந்ததில்லை. இவ்வுண்மை கருதியே

"திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே"

என்றார் ஸ்ரீ சிவப்பிரகாசர்.

"மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகம்" என்றார் மனோன்மணி நூலாசிரியர். "திருவாசகத்துக் குருகாதார் ஒரு வாசகத்துக்கு முருகார்" என்று

தாபழமொழியும் வழங்குகின்றது ஞானமே திருமே னியாகக் கொண்டெழுந்தருளி யிருக்கும் பெருமான் றனது அருமைத் திருக்கையா லெழுதிய திருவேட டை எடுத்துக்கொண்டு தம்மை யடைந்து அவற்றின் பொருளருளுமாறு வேண்டிய தில்லைவாழ்ந்தணர்களை நோக்கி நமது ஸ்வாமிகள் 'இவற்றுக்குப் பொருளா வார் பஞ்சகிருத்தியதாண்டவஞ் செய்தருளும் பெரு மானுரே' என்று மட்டும் கட்டளையிட்டு மறைந்தருளி னா; ஆதலின் திருவாசகத்துப் பொருள்காணப் புகல சரியன்றெனச் சிலா கருதுகின்றார்கள். அது சரி யன்று. எதையும் பொருளறிந்தோதலே சிறப்பு டைத்தாம். பொருளறியா துரைக்கினும் புண்ணிய மெய்தும் எனபாருளராயினும் பொருளறிந்துரைத்த லில் ஆனந்த மதிகம் என்பதில் என்னதடை? தில்லை வாழந்தணர்கள் கேட்டபோது ஸ்வாமிகள்கருத்து அவ்வந்தணர்கட்குப் பொருளுரைத்துக்கொண்டிருத் தலினுஞ் சிறந்த தொன்றினிடத்தே தீவிரித்திருந்தமை யின் 'இவற்றுக்குப் பொருளாவார் சிவபரஞ் சுடரே' எனச் சுருக்கத்தில் விளக்கியருள நேர்ந்ததே யன்றி வேறன்று. ஆயின் வேண்டிய கருவிநூலுணர்ச்சி யின்றி மனம்போனபடி விபரீதார்த்தங் கற்பித்தல் கூடாது திருவாசகத்திற்கு ஆனந்தக்கூத்தர் எனபார் ஒருவர் இயற்றிய சிற்றுரை யொன்றும் திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் இயற்றிய பேருரை யொன்றும் அங்கு மிங்கும் உலாவுகின்றன. திருவாய்மொழி யாதிகட்கு ஏற்பட்டிருக்கும் வியாக்யானங்கள்போல இத்திருவாசகாதிகட்கு சைவசித்தாந்த ப்ரஜ்ஞாவான்

களால் தக்க வியாக்யானங்கள் ஏற்படாமற்போனது ஒரு பெருங்குறை. இத்திருவாசகம் பரம அபரம என்னும் இருதிறக் கிரியைகளிலும் சைவர்களால் பக்தி சிரத்தையுடன் ஓதப்பட்டுவருகின்றது.

ஸ்வாமிகள் உரைக்கப் பெருமான் தமது அருமைத்திருக்கையால் எழுதிய மற்றொரு நூல் திருக்கோவை. இது தமிழ் மொழிக்கே சிறப்பாக உள்ள பொருளிலக்கணத்துக் கிலக்கியமாக அமைந்துள்ளது. இவ்வாறு கருதிக் கண்ட பொருள் சிற்றின்பப் பொருளெனபர். இதற்குப் பேரின்பப் பொருளும் உண்டு. அப்பொருளில் கிளவிகளும் கொளுக்களும் குறிக்கப்பட்டிருக்கின்றனவே யன்றி அப்பேரின்பப் பொருள் முறையே விவரிக்கப்பட்ட உரையொன்றும் காணப்படவில்லை. அது காணுதல் மிகஅரிது பேராசிரியரும்,

"பரம காரணன் றிருவரு ளதனாற்
றிருவாத வூர்மகிழ் செழுமறை முனிவா
ஐம்பொறி கையிகந் தறிவா யறியாச
செம்புலச் செல்வ ராயின ராதலி
னறிவனூற் பொருளு முலகநூல் வழக்குமென
விருபொருளு நுதலி யெடுத்துக் கொண்டனர்
ஆங்கவ் விரண்டனுள்

ஆகமநூல் வழியி னுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்துதற் கரிது"

என்றார். இப்பேராசியர் இதன் சிற்றின்பப் பொருளை நன்கினிது எடுத்து விளக்கி யிருக்கின்றார். இவ்வுரை நச்சினார்க்கினியர் பேரால் வெளிப்பட் டிருக்கின்றது.

அஃது நச்சினாக்கினியா இயறறிய தனறு. பேராசியர் எனறோ சிறபபுப்பெயா அருநூலகள பலவற்றிறகும உரைகணட நச்சினியர்க்கிருநதத லாகாதோ எனின ஜீவகசிந்தாமணியுரைச சிறபபுபபாயிரததில,

"நலலறி வுடைய தொலபே ராசன்
கலவியுங காட்சியுங காசினி யறியப
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற
கிதுபொரு ளெனறவ னெழுதா தொழிய
விதுபொரு ளெனறதற கேறப வுரைததுந
தண்டமிழ் தெரிதத வண்புகழ் மறையோன"

எனப் பேராசிரியா குறுநதொகையுள பொருள் எழுதாதுவிடட இருபது அகவறபாககளுககும பொருள் எழுதி உலகுக் குபகரிததோா என நச்சினார்க்கினியரைச சிறபபிககினறமையின அப்பேராசியர் நச்சினாககினியரின வேறாயினா ஒருவா எனபது திணணம. இனி நச்சினார்க்கினியர்தாமே தாமியறறிய தொலகாப்பியப் பொருளதிகார உரையில அகததிணையியலில "உளளுறை யுவமம்" என்ற நாறபததாறாஞ சூததிரததின்கீழ்,

"யானே ஈண்டை யோனே யென்னல
னேனல் காவலா கவணொடு வேரீஇக்
கான யானை கைவிடு பசுஙகழை
கானக நாடனொ டாண்டொழிந தனறே"

"என்னும் இககுறுநதொகைபோல வருவனவும இச சூத்திரத்தான அமைகக. பேராசிரியரும இப்பாட்டின் பிறெறிதூண்டி லெனறதனை ஏனையுவம மெனறார்" என்றும் களவியலில் "நாட்ட மிரண்டும" என

னும் தொண்ணூற்ருரும் சூத்திரத்தின்கீழ் "இங்ஙனம இதறகிப் பொருளகூறல ஆசிரியாககுக கருததாதல "புகுமுகம புரிதல்" எனனும மெய்பபாட்டியற் சூததிரததானுணாக; அதறகுப் பேராசிரியர் கூறிய உரையானு முணர்க" எனறும கூறியுள்ளாராதலின் பேராசியா நச்சினூர்க்கினியரின் வேருயினர் ஒருவா என்பதில என்னதடை? இஃதுண்மையே. திருககோவையாா உரை நச்சினூர்க்கினியரியறறியதெனக் கொண்டால் குற்றமெனனே? பேராசிரியரே இயற்றினூா எனறேன் கூறவேண்டு? மெனின நச்சினூர்க்கினியரின் உரைசசிறப்புப்பாயிரஙகளுள யாண்டும அவாகோவைககுரையியறறினூா எனபது குறிககபபடாமையாலும, பிரயோகவிவேக நூலாசிரியா தமது பிரயோகவிவேகததின பதினுனகாரு செயயுளினகீழ், "ஆலத்தினூல எனனூ திருககோவையாருள் பேராசிரியர் சொற்சோதனைகாட்டிய 'பாலாறறயிராக்கினூன்' என்பது மது" எனறும, முப்பத்தாருரு செய்யுளின்கீழ், "வஞ்சரையஞசபபடும" எனனுங் குறளினும "கொளளப்படாது மறபப தறிவிலென் கூற்றுககளே" என்னும திருககோவையாரினும பரிமேலழகரும் பேராசிரியரும முதனிலையைப் பிரித்தெழுவாயாககி முடிததலுங்காண்க." எனறுங் கூறுகின்றமையானும் திருக்கோவையாா உரை பேராசிரியர் இயற்றிய தெனவே கூறவேண்டு மென்க. பிரயோக விவேகநூலாசிரியர் காட்டிய மேற்காட்டிய குறிப்புகள் முறையே 'ஆலத்தினூல்' எனவும 'உள்ளப்படுவன' எனவுந்தொடங்கும் திருக்கோவையாரின் முப்பத்தேழு எண்பத

தேழு என்னும் இலக்கசசெயயுள்களின கீழ் இலங்கு கினறன.

நமது ஸ்வாமிகள் அனபுடைமையிற சிறநது விளங்கியவா. ஏதாவது பயன்கருதி அனபு செலுத தியவரலலா. 'பெருமானிடததனபு செலுததவேண டுவதுமுறை. நமக்கு எதுவரினும வருக' எனறே இருநதவா. அது,

"அன்றே யென்ற னாவியு முடலு முடைமை எல்லாமுங், குன்றே யனையா யெனையாட் கொணட போதே கொண்டி லையோ, வின்றோ ரிடையூ றெனகுணடோ வெணடோண முகக ணெமமானே, நனறே செயவாய பிழைசெயவாய நா னோ விதறகு நாயகமே."

"கணணார் நுதலோய கழலிணைகள கணடேன கணகள களிகூர, வெண்ணா திரவும பகலுநா னவையே யெணணு மதுவலலான, மணமேல் யாககை விடுமாறும வநதுன கழறகே புகுமாறு, மணணு வெணணக கடவேனோ வடிமை சால வழ குடைததே *

எனபனவாதிய செயயுள்களால நனகு விளங்கு கினறது கலவியிறகாவஙகொளளாமை முதலாகப் படியெடுததொழுகில நலநதருவனவாக எவ்வளவோ செயலகள் நமது ஸ்வாமிகளின நடையில காணபபடு கினறன. அரசன பரிவாஙகறகெனவிருபபிதத பொ ருளைத திருபபணியிற செலவிட்டமை எனின அது பத்திமாாககததின பாறபடடதாகும. அது படியெடுத தொழுகற்பாலதனறு. அது ஸவாமிகள பததிமுதிரச சியால தறபோதமிழநது செயத செயல. ஸ்வாமிகள

* திருவாசகம-குழைததபதது 7-9-இலக்கச செயயுளகள.

திருவுள்ளத்தே தீஙகொன்றும இருநததிலலையாதலின அசசெயலால அவாகடகுக கேடெய்தவிலலை. அப பொருளைச செலவழிததுச செயத அறஙகளான வநத புண்ணியம அபபொருடகுடையானுகிய பாண்டியனி டததிலேயே சோநதது.

**மாணிக்க வாசகரின் காலம்.**

நமது மாணிக்கவாசக ஸ்வாமிகளின காலம இன னதாக இருககலாம எனபதைபபறறி இரணடொருவாாததைகள சொலலி முடிததுவிடுவோமாக. இமமாணிக் கவாசகரினகாலம இனனதுதான எனபது அவருடைய சரிததிரஙகூறிய எநநூலாலும வெளிபபடையாகத தெரியக்கூடாமல இருக்கினறது ஈவதும ஏறபதும உண்பதும உறங்குவதும ஆகிய எலலாக காரியஙக ளையும சிருஷடியாதிகாலங குறிபபிடடுச சஙகறபித தே செயவதும, அததியாவசியம செயயப்படவேண டிய சமஸ்காரஙகளுளஜாதகாம நாமகாணஙகளையும கொணடொழுகுவதும, இயலபாகவுடைய நாம நம முடைய மதாசாரியருளஒருவருடைய நனனுளையே இநநாளென அறியக்கூடாதிருபபது அதிக வியபபாக இருககினறது.

மாணிக்கவாசகர் ஈழமணடலத்துககுச சென்று அஙகே சைவபபிரசஙகம பணணினுரெனறும அதைக கேடடு ஈழராஜன பவுததமததததை விட்டுச சைவனு னை எனறும திருவாலூரத தலபுராணத்துள் * கூறப்

* The catalogue Raisonne Page 135.

படுகின்றது. இதறகேறப ராஜாத்ணுகரியில * சைவ சன்னியாசி யொருவன், புததனிறநது 1632 வருஷங களுக்குபபின் (கி. பி. 819) ஜமபுத்வீபததிலிருநது இலங்கைக்குவநது மத்வலேசமனனனுடைய தோட்டத்தில் தஙகியிருந்தான; அசசனனியாசியினுடைய உபதேசத்தால இவ்வரசன பவுததமததகதை விடடு விடடுச சைவவனுனன எனறு கூறபபடடிருககினறது. ஆதலால மாணிககவாசகர் காலம கி பி. 819 ஆக இருக்கலாம எனறு J H. நேல்சன் M. A. அவாகளதாம எழுதிய மானயூலில † உதமேதசிககினறாாகள. H H. வில்ஸன் பண்டிதா மாணிக்கவாசாகாலம கி. பி ஐந தாவது நூறறுண்டுககும எடடாவது நூறறுணடுக கும இடைபபடட ஒருகாலமாக இருககவேண்டும் என்கிறாா ‡

இனி நாம நமமிடததேயுள்ள ஆதரவுகளைககொணடு நமது ஸ்வாமிகளின காலம எபபோதாக இருககக்கூடும என்பதை ஒருவாறுக உதமேதசிபபோமாக ஸ்வாமிகள் சரிததிரம தமிழில் திருவாதவூரா புராணம, திருவிளையாடறபுராணம, கடமபவனபுராணம, வேபபததூராா திருவிளையாடல் (இது இனனும அச்சிடப்படவிலலை), திருப்பெருநதுறைப்புராணம எனபவைகளிலும் வடமொழியில, மணிவாசகமகாதமியம, ஹாலாஸ்ய மகாத்மியம், கதமபவனமகாத்மியம, பிருகத தீர்த்தமகாதமியம எனபவைகளிலும விவரிககபபட்

* Upham, Vol II, Page 8.
† Manual of the Madura District, Part III. Page 54
‡ Historical Sketch of the kingdom of Pandia, Page 28.

டிருக்கின்றது (பாண்டிய னொருவனாலியற்றப்பட்ட ஆலவாய்ப் புராணத்திலும், உத்தரகோச மங்கையின் முன்னையபுராணத்திலும இதுவிவரிககபபட்டிருககினறது என்கின்றாகள். அவை அடியேனுககு அகப்பட வில்லை) இததமிழ்நூலகளும சமஸ்கிருதநூலகளும் ஆகிய எலலா நூலகளும நமது மாணிக்கவாசகரை அரிமர்த்தன் பாணடியனுடைய மநதிரியாா எனறு கூறுவ தில ஒத்த கருததுடையனவாக இருககினறன. அவ அரிமாத்தனன், கூன்பாண்டியனுககு முனனையவன என பதிலும திருவிளையாடறபுராணம, கதமபவன மகாத மியம, ஹாலாஸ்யமகாதமியம முதலியவை ஒன்று படு கின்றன. மறற திருபபெருநதுறைப் புராணம முத லியவறறுளளும இதறகு மாறுபாடு ஒனறும இலலை. அரிமர்த்தனனுககு முனனுவது பினனுவது உளள பாணடியாகளைபபறறிய பிரஸ்தாபிககவேண்டிய அவ சியம அவைகடகினமையின் அதைபபறறி ஒனறும கூறவிலலை கூன்பாண்டியன் அரிமர்த்தனனுக்குப் பின னவனென்பது வில்ஸன் பண்டிதர் கொடுககிற வமசா வளிப்பட்டியாலும தெரிகினறது. அவர் ஹாலாஸ்ய மானமியப்படியும ஒருபட்டி கொடுக்கினறார் அதிலே யும அது தெரிகின்றது என்பது சொலலவேண்டுவ திலலை; ஆலாஸ்யமான்மியத்தாற் றெரிகின்றதென்பது முனனரே சொன்னேமாதலால். சைவசமயாசாரிய ருள் மற்றொருவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் இக்கூன்பாண்டியன் காலத்தவா என்பது பன்னிரண் டாந திருமுறையாகிய பெரியபுராணததால் நன்கு விளங்குகின்றது. திருஞானசம்பந்தரது தேவாரததி

லும் அதற்கு வேண்டிய ஆதாரங்கள இருக்கின்றன. திருஞானசம்பந்தரும திருநாவுக்கரசரும ஒரேகாலததவா கள். திருநாவுக்கரசா சிவபெருமானது நரிபரியாக்கிய திருவிளையாடலை,

"நரியைக குதிரைசெய வானு நரகரைத் தேவுசெய் வானு
விரதஙகொண டாடவல லானும் விசசின்றி நாறுசெய் வானு
முரசதிாந தானைமுன் னோட முன்பணிந தன்பர்க ளேதத
வரவரைச சாததிநின றானு மாரூர மாநதவம மானே."

என்ற திருவாரூர்த் தேவாரததும, வையைககரை யடைக்கசசென்று மண்சுமநத திருவிளையாடலை,

"அருப்போட்டு முலைமடவாள் பாகந தோனறு
மணிகிளரு முருமென்ன வடாககுங் கேழன்
மருப்போட்டு மணிவயிரக கோவை தோனறு
மணிமலிந்த நடந்தோனறு மணியார் வைகைத்
திருககோட்டி னின்றதோர் திறமுந் தோனறுஞ்
செககாவா ளொளிமிகுத திகழ்ந்த சோதிய
பொருப்போட்டி நினறதிண புயமுந் தோன்றும
பொழிறிகழும பூவணததெம புனித னாககே."

என்னும பூவணத திருததாண்டகத துள்ளும் குறிப் பிடுகினறாா. அவ்விரண்டு திருவிளையாடலும பெரு மானால மாணிக்கவாசகரின பொருட்டுச செய்யப பட்டன எனபதை முனனரே குறிததிருககின்றேன. ஆதலின் மாணிக்கவாசகர் ஞானசம்பந்தர்ககு முனன வா எனபது நன்குவிளங்குகினறது.

அப்படியாயின் திருஞானசம்பந்தர் அருளியவை முதன்மூன்று திருமுறைகளாகவும திருநாவுக்கரசர் அருளியவை அடுதத மூன்று திருமுறைகளாகவும அமைக்கப்பட்டிருக்க, அவாகளுககு முனனையவராகிய

இவா அருளிய வாசகமும கோவையும எட்டாந் திரு முறையாக அமைககப படுவானேன்? எனில, திரு முறை வகுதத நம்பியாண்டார் நம்பிகள் அவ்வவாக ளின காலததைக காரணமாககொணடு வகுத்தாரல் லர். சுந்தரமூாத்திநாயனூர் அருளியவை ஏழாநதிருமுறை யாக இருகக, அவருடன் ஒருகாலததவராகிய சேர மான் பெருமாணுயனூர் அருளியவை பதினேராந்திரு முறையாக அமைநதிருப்பதை நோக்கினுல் இவ்வு ணமை விளங்கும. கடைச்சங்கப் புலவராகிய நக்கீர னூருளியவை பதினேராந் திருமுறைப் பிரபந்தங்க ளுள் ஒனருக இருததலைக்கண்டுமெ அவ்வவா இருநத காலததைககொணடு முறைவகுததாா நம்பிகள் என பாா உணடா?

ஞானசம்பந்தருடைய அற்புதங்களில் விடதீக்கி யது ஒன்று. அவ்வறபுத வரலாறு பரஞ்சோதியார் இயறறிய திருவிளையாடற் புராணப்படி இது. சமுத திரதீரததேயுளள ஓாபட்டினததில (ஆலாஸ்யமான மியம காவேரிபுரம் என்கினறது.) ஓாவணிகன் இருந தான அவன் அருநதவம புரிநதோா பெண்மகவினை ருன. அவனுககு மதுரையில ஒரு மருகன் இருந தான் அவன முதனமணம முடித்துக்கொண்டவனு யிருநதாலும அவனுக்கே தனபெண்ணை விவாகஞ் செயது கொடுககவேண்டும என்று நிச்சயித்திருந தான் இக்கருதது முடியும முன்னர் அவ்வணிகனும அனைமனைவியும ஆவியிழநதார்கள். ஊரவர்கள் அனு ப்பிய ஓலையால் அசசெய்தி யுணர்நத மருகன் மதுரை யைவிட்டு மாமனது நகரடைந்து சிலநாடடங்கி மாம

னது ஆஸ்திகளைச் சுவாதினப்படுத்திக்கொண்டு அவனது கருததின்படியே அவனமகளை மணமபுரிந்து கொள்ளுவதாக உடனழைத்துக்கொண்டு மதுரை நோக்கிப் புறப்பட்டான். தன்னுடன் வநத சுற்றததார் முதலியவாகளை முன்செலலுமாறு அனுப்பி விட்டுப் பரிசனங்களும தானும தன மாமனமகளுமாகச செல்பவன் வழியிலே திருப்புறம்பியம் எனனும க்ஷேத்திரத்திலேதங்கி அங்கேயுள்ள தீாததததின மூழ்கிச சிவாலய தரிசனஞசெய்து உண்டு உறஙகினன் அப்போது அங்கே ஒரு கொடுமபாமபுவந்து அவனைக் கடிததுக்கொனறது. அதுகண்டு உடனிருந்த பரிசனங்களும் துப்ரேவன்மகளிரும் அழுதார்கள். அதை அவனை மணத்தறகென்று அவனுடன் வந்திருந்த கன்னிகண்டு மூர்சசித்தாள். பினபு அவள் உடனிருந்த பரிசனங்கள் செயத சைததியோபசாரத்தால் பிரஜ்ஞையடைநது பெருநதுககததுடன வாயவிட்டழுதாள. அதை அப்போது அநத க்ஷேத்திரத்திற்கு வநதிருநத ஞானசம்பந்தா கேட்டு அவளிருககுமிடத்தே வநது சேர்நது அவளை விசாரிதது நிகழ்நத செய்தியறிநது அவ்வணிகனை (பஞசாக்ஷர மிருத்யுஞசயாதி மநதிரங்களைசசெபித்து) உயிாப்பித்து அவனைநோககி நீ உன் மாமனமகளாகிய இக்கனனிகையை இஙகேயுள்ள வன்னி, கிணறு, லிங்கம ஆகிய இவறறைச சாக்ஷியாகக்கொண்டு இப்போதே மணமபுரிநதுகொள் எனறருளிச செய்தார். அவ்வணிகனும அப்படியே விவாகம பண்ணிக்கொண்டு தன்னூா (மதுரை) சோநதான. பின்பு அவனுக்கு மூததாளும இளையாளும ஆகிய

இருமனைவியாகளிடததும குழநதைகள் பிறநதன. பினபு அவவிருதிறக குழநதைகளுள்ளும நிகழ்நத கலகங் காரணமாக மனைவியாகள் இருவாககும கலக முண்டாயிற்று. மூததாள் இளையாளது விவாக விஷயததைப் பழித்துச சாக்ஷிகேட்டாள். இளையாள் அது பற்றி வருநதிப் பெருமானைப் பிராாததிகக அவர் அருளால முனனே புறம்பியத்திருந்த வன்னியும கிணறும விஙகமும மதுரைத திருவாலயததிடநதே வந்து அவள் கறபின றனமையைச சிறப்பிததன. அது கண்டு எல்லாரும இளையாளைககொண்டாடி மூத்தாளை வைதார்கள. கணவனும, நீ குற்றமற்றவளுககுப் பழி யுரைத்தாய் எனகுடிக்காகாய எனறகற்றினை. அபபோது இளையாள் தனகணவனை வணஙகி மூத்தாளைச் சோத்துககொள்ளுமாறு வேண்டிக்கொண்டாள். பினபெலலாரும ஒற்றுமையாக வாழ்நதாாகள.

இவ்வரலாறு சிலப்பதிகாரத்தே மதுரைக்காண்டத்தில் வஞ்சினமாலையில

"வன்னிமரமுமடைப்பள்ளியுஞசான்றாக
முனனிறுததிககாட்டியமொயகுழலாள."

என்று கண்ணகியின் கூற்றாகக் கூறப்பட்டிருக்கின்றது. சிலப்பதிகாரம் இயற்றிய காலம் மகாவம்ஸத்தின் உதவியால் கி. பி. 113 - என்று தமிழ்சசரித விஷயத்தில் பல உண்மைகளை முயன்று கண்டு உலகுக்குபகரித்துவரும ஸ்ரீசேஷகிரி சாஸ்திரியார் அவர்களால நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலின் மாணிக்கவாசகர் காலம கி. பி. 113-க்கு முன்னிட்ட ஒருகாலமாக இருககலாம என ஒருசாராா கருதுகினறனர்.

அது பொருந்தாது. திருவிளையாடலிற் கூறப்பட்ட மேற்காட்டிய ஞானசம்பந்தர் விடந்தீர்த்த வரலாறானது பெரியபுராணத்திற்கு மாறுபடுகின்றது. பெரியபுராணமும் திருவிளையாடலும் ஒன்றோடொன்று மாறுபட்டால் அப்போது பெரியபுராணந்தான் ஏற்கத்தக்கது என்பது தெரிந்த விஷயம். பெரியபுராணம் திருமுறைகளுள் ஒன்று. திருவிளையாடல் அப்படியல்ல. சரித்திர விஷயத்திலும் திருவிளையாடலிலும் பெரியபுராணஞ் சிறந்தது. பெரியபுராணத்தின்படி அவ்வரலாறு என்னவென்றால்,

வைப்பூர் என்ற ஊரினிடத்தே தாமன் என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு ஏழுபெண்கள் இருந்தார்கள். அவர்களுள் மூத்தாளை அத்தாமன் தன்மருகனொருவனுக்கு மணம்புரிவிப்பதாக வாக்களித்திருந்தான். பின் திரவியாபேக்ஷையால் வேறொருவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்துவிட்டான். பின்னர் அவ்விதமாகவே மற்ற ஐந்துபெண்களையும் முதலில் அம்மருகனுக்கென்று வாக்களித்தது நிறைவேற்றாமல் மற்றவர்களுக்கேகொடுத்துவிட்டான். அதுகண்டு அவனதுகடைசிப்பெண் அம்மருகன்மீது அன்புடையளாய்த் தன்தந்தைதாயரை அறியாது அவனுடன் புறப்பட்டுவந்துவிட்டாள். வழியில் திருமருகல் என்றக்ஷேத்திரத்தில் தங்கியிருக்கையில் அம்மருகனை ஒரு பாம்புகடித்துக்கொன்றது. அதுபற்றி அப்பெண் வருந்துகையில் அப்போது அங்கேவந்திருந்த திருஞானசம்பந்தர் அப்பெண்ணுக்கிரங்கி மருகற்பிரானைப்பாடி அம்மருகனை உயிர்ப்பித்து அப்போதே அவ்விருவர்க்கும் மணம்புண

ரும பெருவாழ்வு வருததுவிட்டார், என்பதாம். திரு ஞானசம்பந்தர் விடநதீர்த்த சமபவம திருமருகலில நடநததாக இஙகே பெரியபுராண வரலாற்றில் விளங்குகின்றது. திருஞானசம்பந்தர் விடநதீர்த்தபோதுபாடிய,

"சடையா யெனுமால சரணீ யெனுமால்
விடையா யெனுமால வெருவா விழுமான்
மடையாா குவளை மலரும மருகல்
உடையாய தகுமோ விவளுண மெலிவே."

என்ற தொடகத்துத் தேவாரமும இவ்வுண்மையை நாட்டுகின்றது.

ஆதலின இதற்குமாறாக இசசம்பவம திருப்புறம்பியத்தே நடநததாகக கூறும் திருவிளையாடற புராணவரலாறு ஏறகத்தக்கதன்று. வணிகன வன்னி, கிணறு, லிங்கங்களை ச சாக்ஷியாககொண்டு கன்னியை மணநததாகப் பெரியபுராணங் கூறுகின்றதில்லை. திருஞானசம்பந்தரால உயிர்பபிககபபட்டவுடன் புரிநது கொண்ட மணத்திற்குச சாக்ஷியாகக கொள்ளவேண்டுமானால திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும அவருடனிருந்த கணககிலாத திருககூட்டத்தாரும இருநதிருககவிலலையா? வணிகனுடைய பரிசனங்களும கன்னிகையின் ஏவனமகளிரும என்ன வாயினார்கள்? அவன இறநதபோது அவர்கள் உடனிருநது அழுதார்கள் எனத் திருவிளையாடற புராணத்தார கூறுகின்றாரே!

"அஙகுள பரிச னங்க ளாவலித் திரங்கிச சூழக்
கொஙகைகள் புடைததுச சேடிக குற்றிடை மகளி ரேங்கச்
சிஙகவே றனையா னுகந் தீண்டிடா தொதுஙகிப் போநத
பங்கய மலாக்கொடி பன்னாள் பாவைபோற் புறமபு நின்றாள்."

பல பரிசனங்களும் ஏவன்மடந்தையருஞ்சூழ இருக்கையில் தன்வரலாற்றை அவர்களுள் ஒருவர் கூறவிடாது அக்கன்னிகை, தான் அவ்வணிகனை மணக்கவந்தது முதலிய செய்திகளைத் தானே கூறத்துணிந்ததும் ஆச்சரியமே. பின்னர்க்கலாமகிழ்ந்து மாற்றாள் 'உன்னைக் கணவன் அக்கினிசாக்ஷியாக மணந்ததற்குச்சாக்ஷி என்ன?' என்று கேட்டபோது இக்கன்னிகை நம்முடைய பரிசனங்களைக்கேள், ஏவல் மடந்தையரைக்கேள், பலவாயிரம் திருக்கூட்டத்துடன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இருக்க வில்லையா என்று கூறக் கருதாததும் ஆச்சரியம். இதையெல்லாம்பார்ப்பதித திருவிளையாடற்புராண வரலாறு தனித்தனி நிகழ்ந்த இருவேறு வரலாறுகளைப் பிணைத்தாக்கிய தொன்று எனத் தமிழுலகுக்குப் பரமோபகாரியாக இருந்த ஸ்ரீசுந்தரம்பிள்ளை M. A. அவர்கள் கருதியது ஏற்றதுதான் என்பது நன்கு விளங்குகின்றது.

அவ்விருவேறு வரலாறுகளாவன, ஒன்று மேற்காட்டிய பெரியபுராண வரலாறு. மற்றொன்று திருப்புறம்பியத்தே நிகழ்ந்த வன்னியற்புத வரலாறு. அதாவது, காவிரிப்பூம்பட்டினத்தே ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கு ஒரே ஒரு பெண் இருந்தது. அவனுக்கு மதுரையில் ஒரு மருகனுண்டு. அவன் முதன் மணம் புரிந்தோன் ஆயினும் அவனுக்குக் குழந்தையில்லை; ஆதலின் அவனுக்கே தன்பெண்ணைக் கொடுக்க வேண்டும் என்பது அவ்வணிகனது பிரியமாக இருந்தது. அவன் மனைவிக்கு அது பிரியமில்லை. அவள் தன்

தமபிககுக கொடுககவேண்டுமெனக கருதினுள். பெண்ணுககு அது பிரியமிலலா திருநதது. அவ ளுககுத தனதநதை குறிதத கணவனை மணப பதிலேயே கருததிருநதது. அககணவனுககும தன மாமனமகளை எபபடியும மணமபுரியவேண்டுமெனற ஆசைமிகுதியு மிருநதது. தன மாமனும மாமியும ஒதத கருததுடையவாகளாக இராமையினுல விவா கம நெடுநாளாகத தாழ்த்திருநததுகண்டு அவன காவிரிப்பூம்பட்டினஞ்சென்று அபபெண்ணைப் பெற ேறாகளுககுத தெரியாமல் தனனுடன கூட்டிக கொணடு மதுரைநோககி வருபவன வழியிலே திருப்புறம்பியததே தஙகியபோது அவனைப் பாமபுகடி ததுக கொனறுவிடடது. அதுகணடு அபபெண அஙகு மிஙகுமபோய இஙகே சாப்பவிஷம நீககுபவா யாராவது உணடாவெனறு கூவியழுதாள. உடனே அததலததே எழுநதருளியிருககும பெருமான சாபப விஷம நீககும மநதிரவாதிபோல வடிவஙகொணடு வநது அவ்வணிகனை உயிாபபிதது அவனைநோககி இபபோதே நீ இஙகே இபபெண்ணை விவாகமபண்ணி க்கொளளெனறா அதறகவன "ஐயா பநதுககளுமசா க்ஷிகளுமினறி எபபடி விவாகமபணணிககொளவது? நான எனனூர் போனவுடன் செய்துகொளளுகின றேன்" எனறுன. அவறகவா அங்கேயிருநத லிங்கம், அமபிகை, வன்னி, கிணறு, அடுக்களை எனபவற்றைக காட்டி 'இவற்றைச சாக்ஷியாகக்கொண்டு விவாகம பண்ணிககொள' என்றா. அதைக்கேட்டு அவ்வணி கனும கனனிகையும நகைததாாகள. மநதிரவாதி

வடிவங்கொண்டிருநத பெருமான உடனே மறைநதாா அதைககணடதும அவவிருவருமபயநது வநதவர் பெருமானெனபதை உணாநது அவவிலிஙகம முதலியவைகளேயே சாக்ஷிகளாக வைததுககொணடு இரணடாமபோ தெரியாமலே விவாகம முடிததுககொண்டு மதுரை யடைநதாாகள. பின அவ்வணிகனுககு இரு மனைவிகளிடததும குழநதைகள பிறநதன. அககுழநதைகளுள நடநத கலகம காரணமாக மனைவியாகள இருவருககும சண்டை நடநதது அப்போது மூததாள இளையாளைநோககி 'உனனை எனகணவன விதிபபடி விவாகமபுரிநதாரு ? அதறகுச சாக்ஷியெங்கே?' எனருள். இளையாள தனமனறறசாக்ஷிகளைக கூறினுள். மூததாள நகைதது அககரிகளை இஙகுவரச சொலலெனருள. இளையாளவருநதிப பெருமானைவேணட அவை மதுரையின ஆலயததேவநது உறைநதன. அதுகண்டெலலாரும மூததாளையிகழநது இளையாளைபபுகழநதாாகள. குடிககாகாயெனறு கணவனும மூததாளைநீககபபுகுநதவன இளையாளது வேணடுதலுககிரஙகி வைததுககொணடான. பினபெலலாரும ஒறறுமையாக வாழ்நதாாகள எனபதே.

இது சமபநதமான வனனிநாடகம சமீபகாலத்திற்கு முன்வரை வருஷாவருஷம திருப்புறம்பியத் தலததிலே நடிககப்படடு வநததெனகினருாகள. இவ் வனனியற்புத வரலாறறையும மேலே காட்டிய பெரிய புராண வரலாற்றையும ஒன்ருகப் பிணைததுததான் திருவிளையாடற்புராண வரலாறு நடைபெறுகினறது.

ஆனால் சிலர் கருதுகின்றபடி இக்கட்டுக்கட்டியவர் பரஞ்சோதி முனிவரல்ல. வடமொழியிலுள்ள ஆலாஸ்ய மான்மியத்தின்படி இவர் தமிழில் இயற்றியவரேயன்றி வேறல்ல. அவ்வடமொழி நூலாசிரியர்தான இருவேறு வரலாற்றையும் ஒன்றுபடுத்திக் கட்டியவர். பரஞ்சோதியாரும் அவருக்கு முன்னர்த் தமிழிலே புராணமியற்றிய வேம்பத்தூர்ச் சங்கத்தாரும் பிறரும் அவ்வடமொழி யாசிரியரைப் பின்பற்றியவர்கள்.

ஆகவே வன்னியற்புத வரலாற்றுடன் திருஞானசம்பந்தருக்கு யாதொரு சம்பந்தமும் இன்மைதெளிவாக விளங்குகின்றமையின் அவர் காலம் சிலப்பதிகாரமியற்றியகாலமாகிய கி. பி 113-க்கு முன்னிட்டதொன்றன்று என்பது போதருகின்றது.

சிறுத்தொண்டர், நரசிம்மவர்மனது சேனைத்தலைவராகவிருந்து வடபுலத்தேசென்று பகைவரைமுறியடித்து வாதாவித் தொன்னகரைத் தூளாக்கி வந்தமை,

"ஈசனடி யார்க்கென்று மியல்பான பணிசெய்தே
யாசில்புகழ் மன்னவன்பா லணுக்கரா யவற்காகப்
பூசலமுனைக் களிறுகைத்துப் போயவென்று பொருமரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார்"

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந்தார்."

என்ற பெரியபுராணச் செய்யுள்களால் நன்குவிளங்குகின்றது. நரசிம்மவர்மன் என்றபெயரால் இரண்டரசர

களுண்டு. அவாகளுள முதலாவதவன் சேல்யூக மன் னவனுகிய புலிக்கேசனே ஜயிதது அவனுடைய ராஜதா னியாகிய வடபியை * அழிததாகத தெரிகின்றது. அபபுலிக்கேசன் இரண்டாவதவன. அவன் சகவருஷம 532-ல அதாவது கி. பி. 610-ல ஆளதடொடங்கிய வன † ஆதலால அசசிறுத்தோண்டாகாலம ஏழாநூற ருண்டின தொடக்கமெனபது தெரிகினறது. அசசிறு தோண்டருமதிருஞானசம்பந்தரும் ஒரேகாலததவாகள.

"அநநாளிற் சண்பைநக ராண்டகையா ரெழுநதருள
முனனுக வெதிாகொண்டு கொடுபுகுநது முந்நூலசேர்
பொனமார்பிற சிறுதடொண்டர் புகலிகா வலனுர்தம்
நன்னுமச சேவடிகள் போற்றிசைதது நலனுசிறநதார்."

என்ற பெரியபுராண செய்யுளால் அசசிறுத்தோண்டர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனுரை எதிாகொண்டழைத் துபசரித்தமை தெரிகின்றது.

"செந்தண்பூம் புனலபரந்த செஙகாட்டங் குடிமேய
வெநதநீ றணிமார்பன் சிறுந்தோண்ட னவன்வேண்ட
வர்தணபூங் கலிககாழி யடிகளையே யடிபரவுஞ்
சந்தஙகொள் சம்பநதன றமிழுரைப்போர் தககோரே"

என்ற திருஞானசம்பந்தமூர்த்திநாயனு ரருளிசசெய்த தே வாரத்தால இப்பதிகம சிறுத்தோண்டரின வேணடுத லின்படி இயற்றபபட்டதெனபதும் விளஙகுகினறது. ஆதலின் திருஞானசம்பந்தரின் காலமும மேறகாட்டிய கி. பி. ஏழாநூற்றுண்டின் தொடக்கமென்றே ஏற்படு

* Badamy of Bombay Presidency.
† S. I. Inscription vol. I. Page 11.

கின்றது நமது மாணிக்கவாசகர் இசசம்பந்தருக்கு முன்னவரென்பது முன்னரே திருநாவுக்கரசரின் தேவாரத்தைக்கொண்டு நாட்டப்பட்டது. ஆதலின் அவர் காலம் நெல்சன்துரையவர்கள் கருதுகிறபடி கி. பி 819 அல்லவென்பது பிரத்தியக்ஷம். மாணிக்கவாசகர் ஈழமண்டலம் சென்றதாகப் புராணஞ் சொல்லுகின்றதில்லை. அவர் பிரசங்கஞ் செய்துவந்ததாகக் கருதவும் (மிஸ்டர் டெய்லர் சொல்வதைவிட) வேறே ஆதரவில்லை. கலவிமாணுகிய அவர் தம்மை அடுத்தவர்க்கே தாவது உபதேசித்திருக்கலாம். அதுவும் அவர் துறவு பூண்பதற்கு முன்னிருந்திருக்கும். அவ்வுபதேசமொழிகள் நமவரை சேமிக்கப்பட்டு வராமை நமது தூபபாக்கியமே. தனது ஆனமலாபத்திலேயே இருந்த அவர் பிறர்க்குப் பயன்படுமாறுபிரசங்கஞ் செய்யாமலும் இருந்திருக்கலாம். தில்லையில் அபிமானமுடைய பரதேசியின் வார்த்தையால் கோபித்துத் தில்லைக்கு வந்தவனுடன்தானே மாணிக்கவாசகர் வாதிட்டார். அதுமுன்னமே சொல்லியிருக்கின்றோம் ஈழமன்னன் தன்மகளது ஊமைத்தன்மை நீங்கியதுபற்றியே சைவனாயினன்; தெய்வத்தன்மையறிந்து அவன் ஒருவர் உபதேசங்கேட்டுச் சுவமதமவிட்டுப் பரமதப்பிரவேசஞ்செய்யக் கூடியவனல்ல. தில்லையில் பவுத்தகுருதோற்றபின்னும் அவன் அற்புதமே வேண்டினன். மாணிக்கவாசகர் தாமே ஈழஞ்சென்றிருப்பின் அவ்விடத்திலேயே இவ்வாதம் நிகழ்ந்திருக்கும். ஆதலால் ஜம்புத்வீபத்திலிருந்து ஈழஞ்சென்றாரென்று ராஜரத்னாகரியில் குறிப்பிட்ட சன்னியாசி மாணிக்கவாசகர்

அல்ல என்பதே துணிவு. மாணிக்கவாசகர் திருக் கோவையாரில்,

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளு
முறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
றுறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
விறைவா தடவரைத் தோட்டென்கொ லாம்புகுந் தெய்தியதே"

என்று சங்கத்தைக் குறிப்பிடுகின்றார். சங்கச் செய்யுள்கள் ஒன்றிலும் இவரைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. சங்கத்தார் காலத்திறுதி கி பி. இரண்டாவது நூற்றாண்டு எனப்படுகின்றது. ஆதலின் மாணிக்கவாசகர் காலம் வில்சன் பண்டிதர் கூறுகிறபடி ஐந்தாம் நூற்றாண்டுக்கும் எட்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட ஒரு காலமாக இராவிட்டாலும் இரண்டுக்கும் ஏழுக்கும் இடைப்பட்ட ஒருகாலமாக இருக்கலாம் என்பது நிச்சயம்

ஒருசாரார் சங்கத்தார்காலம் என்பதே ஒன்றில்லை. ஏனென்றால் வம்சசேகரன் காலத்தே ஏற்பட்ட கடைச்சங்கத்தார் குலேசபாண்டியன் காலம் வரை இருந்ததாக ஆலாஸ்ய மான்மியம் கூறுகின்றது. வம்சசேகரன் முதல் குலேசபாண்டியன் வரை பதினாறு பாண்டியர் வரை ஆட்சிசெய்திருக்கின்றார்கள். ஒவ்வொருவருடைய ஆட்சிக்கும் சராசரி இருபது வருஷம் வைத்துக் கொண்டாலும் பதினாறு பாண்டியருடைய ஆட்சிக்கு 320 வருஷம்வரை செல்லுமே சண்பகமாறன் காலத்தே கீரனை கரையேற்றுமாறு வேண்டிய கபிலன், குலேசபாண்டியன்காலத்திய இடைக்காட

னுக்கு நம்பனென ஆலாஸ்யமான்மியங்கூறுகின்றது; எனகின்றார்கள். இது சரியன்று. சரித்திர விஷயத்தில் திருவிளையாடற் புராணம் பிராமாணிக்கத்தக்கதன்றென முன்னரே காட்டினோம். அரிமர்த்தனனுக்குப் பின் பன்னிரண்டாவது பாண்டியனாகிய கூன்பாண்டியன் காலத்தவராகிய சிறுத்தொண்டரை அரிமர்த்தனன் கூறுந்துதியில்

"அன்று சிறுத்தொண்டர் பிள்ளைக் கறியமுது
மென்று சுவைதெரிந்த வேடனிட்ட வூனும்போ
னன்று நரையாட்டி யிடப்பிட்டு நயந்தருந்தி
யென்று மடியாரக் களிவந்தா யெந்தாயே."

என்று நுழைத்த இப்புராணத்தைச் சரித்திர விஷயத்திற்கு எப்படி ஆதாரமாகக்கொண்டு ஆய்வது? ஆயின அகப்பொருளுரையில் "தலைச்சங்கத்தார் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தார். அவரைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதிமுதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மர். இடைச்சங்கத்தார் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தார்; அவரைச்சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மர். கடைச்சங்கத்தார் ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு சங்கமிருந்தார். அவரைச் சங்கமிரீஇயினார் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர்" என்று கூறப்படுகின்றதே எனின் அஃதொக்கும். சங்கம் மூன்று என்பதும் ஒவ்வொரு சங்கமும் பலவருஷங்கள் நிலைத்திருந்த தென்பதும் உண்மையே ஒவ்வொரு சங்கமும் ஒவ்வோர

அரசனுலேற்பட்டுச சிலதலைமுறைவரைநிலைததிருநது
பின் அழிவெய்தியது போலவே புலவாகளும அவ்வப
போது அழிவெய்திஞாகள். சஙகம இருநத கால
மெலலாம ஒரு சிறப்புலவர்களே இருநது தமிழாராய்
நதாாகள் எனபதிலலை. அகபபொருளுரையிற் கூறப
பட்ட சேந்தம்பூதனுர் என்ற புல்வா பெயா வளளுவ
மாலையிற குறிபபிட்ட பெயாகளுள காணபபடுகிற
திலலை. ஒருவா பெயர் ஒனறில இருப்பதறகும மறற
நூலில அதற்குப் பிரதியாக வேறுபெயா இருததலுக
கும் காரணம என்ன? சஙகத்தாா நாறபத தொன
பதினமா என்பது நிசசயம. ஆனுல அவாகளைத தவிர
வேறே புலவர்களும சஙகததிறகுப புறமபே இருந
தாாகள் எனபதையும நாம கவனிககவேண்டும; நாற
பத்தொன்பதினமா இருநது நடததிய கடைசசஙகத
தில அவருளளிட்டு நானூறறு நாறபததொனபதின
மர் பாடினா எனப்படுகின்றதாதலின சஙகததாருள்
ஒருவரிறந்து ஓராசனம காலியாயின தககவராகிய
வேறொருவா அததானததுககு நியமிககபபடுவா. பா
ண்டியன நாறபத்தொன்பதினமா அடங்கிய சங்கத
தை ஆதரித்து வநதான் என்பதேயனறி ஆதியில ஏற்
பட்ட அநநாற்பததொனபதினமரே அநதமவரை இரு
நதாாகள் என்பதன்று. இதனுறுன ஓரிடததே கா
ணப்பட்ட பெயர் மற்ற இடத்தே காணபபடுகின்ற
தில்லை. "வறகடனுசென்றுழி" ககலைநத சங்கத்தை
மீட்டுங் கூட்டுழி முன்போலவே நாறபததொன்பதின
மா அகபபட்டும பொருளதிகாரம வலலாரகபபடாமை
யானும் இதனுண்மை விளங்குகின்றது. முன்னிருநத

நாற்பத்தொன்பதின்மருட் சிலர் இடைப்பட்ட பன்னி ரண்டு வருடங்களில் இறந்தொழிந்தார்கள் அவர்களு க்குப் பிரதியாக வேறு புலவர்களையுஞ் சேர்த்து நாற்ப த்தொன்பதின்மராக்கினார் என்பது வெளிப்படையா கத் தெரிகின்றது. ஆதலின் சங்கம் பல்லாயிரம் வரு டங்கள் இருந்ததென்று கூறியதனால் ஒரு திறத்தாரே இருந்தார் என்று கருதிக்கூறியதாக நினைத்துச் சங்கம் என்பதே ஒன்றிருந்திராதுபோலும் என ஐயுறுவது சரியன்றெனத் தெரிகின்றது.

இனி ஒரு சாரார் கடைச்சங்கத்தாருள் ஒருவ ரெனப்படுகின்ற கல்லாடர் தாமியற்றிய கல்லாடத்தில்

"வெடிவாற் பைங்கட் குறுநரி யினத்தினை
எழிடந் தோன்றி யினனூற் றியைந்து
வீதி போகிய வாலுளைப் புரவி
யாக்கிய விஞ்சைப் பிறைமுடி யந்தணன்"

என்றும்

"நிமிர்சடைப் பெருமான்
உரகனவாய் கீண்ட மாதவன் போல
மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொற்றா ளாகி
நரைத்தலை முதியோ ளிடித்தடு கூலிகொண்
டடைப்பது போல வுடைப்பது நோக்கிக்
கோமக னடிக்க வவனடி வாங்கி
யெவ்வுயி ரெவ்வுல கெத்துறைக் கெல்லா
மவ்வடி கொடுத்த வருணிறை நாயகன்"

என்றும் மாணிக்கவாசகர் பொருட்டுப் பிரான் செ ய்த நரிபரியாக்கியதும் மண்சுமந்ததும் ஆகிய ஆடல்

கள் குறிப்பிடுகின்றமையின் மாணிக்கவாசகர் காலம் சங்கத்தார் காலத்திற்கு முன்னல்லா விடினும் சங்கத்தார் காலத்தோடொரு காலமாக வாயினும் இருத்தல் வேண்டுமென்கின்றார்கள்.

கல்லாடம் இயற்றிய கல்லாடர் சங்கத்துக் கல்லாடரின் வேறாயினார் ஒருவர் சங்கத்தாரில் ஒருவராக இருந்து தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், அம்பாகிழான்அருவந்தை, பொறையாற்றுக் கிழான் என்ற இம்மூவரையும் பாடிய கல்லாடர், இக் கல்லாடம் இயற்றிய கல்லாடரல்லர் புறநானூற்றில் காணப்படும் கல்லாடர் செய்யுணடைக்கும் இக்கல்லாட நடைக்கும் வேறுபாடு மிகப்பெரிது. நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களால் இக்கல்லாடச் செய்யுளியாண்டும் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட வில்லை. இது அவ்வுரையாசிரியர்கள் காலத்துக்கும் பிற்பட்ட நூல் என்பது அதனால் நன்கு விளங்குகின்றது. அன்றியும் அவர் தாமியற்றிய கல்லாடத்தில்

" ... பொருண்மரபொடுங்க
மாறனும் புலவரு மயங்குறு காலை
முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கால்
அன்பினைந் திணையென றறுபது சூத்திரம்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோல்
பரப்பின தமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்"

என்று கூறினார். இவர் சங்கத்தாருள் ஒருவராக இருந்தால் 'மாறனும் புலவரும்' என்றும் 'கா

கட்கு' என்றும் கூறுது 'புலவரும்' எனவும், 'அவர்க்கு' எனவுமகூறுவரா? இப்படியே பின்னருமகல்லாடததில,

"வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

என்று, 'எம்முன' என்றுரையாது 'புலவர்' என்கின்றார். பின்னரும

" அகப்பொரு ளமுதினைக்
குறுமுனி தேறவும் பெறுமுதற் புலவர்க
ளோரேழு பெயரும் கோதறப் பருகவும
... ... தமிழ்ப்பெயர் நிறுத்தி
எடுத்துப் பரப்பிய இமையவர் நாயகன்"

என்று வெளிப்படையாக நாற்பத் தொன்பதினமருக்கும என்று வேறுபடுத்தி யுரைத்திருக்கின்றார். ஆதலின் இவர் சங்கக் கல்லாட ரல்லர் என்பது நிச்சயம். இக்கல்லாடர் காலம் பெரியபுராணம் திருவிளையாடல் (வேப்பத்தூரா ரியற்றியது) ஆகிய இவற்றின் காலத்துக்குப் பின்னும் பரஞ்சோதியார் காலத்துக்கு முன்னும் ஆன ஒரு காலமாக இருக்க வேண்டும். தருமிக்குக் கிழியளித்தது, கரிக்குருவிக் குபதேசித்தது, நரிபரியாக்கியது, மண்சுமந்தது, இந்திரன் பழிதீர்த்தது, வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியது, மாணிக்கம் விற்றது, திருமணம் புரிந்தது, குண்டோதரனுக்கன்னமிட்டது, வையை அழைத்தது, திருமுகங்கொடுத்தது, தடாதகை திருவவதாரம், வலைவீசியது, கல்லானைக்குக் கருமபருத்தியது, செனனியைச் சிறைவிடுத்தது, பன்றிக்குட்டிகளுக்கருளியது, புலிமுலை

புல்வாய்க் கருளியது, விறகு விற்றது, மாமனாக
வந்து வழக்குரைத்தது, மூர்த்திக் கருளியது முதலிய
திருவிளையாடல்களை இக்கல்லாடர் தம் கல்லாடத்தே
குறிப்பிடுகின்றார். சாக்கியர், மூர்த்தி, கண்ணப்பர்,
காரைக்காலம்மை, என்ற நாயன்மார்களையும் குறிக்
கின்றார். இதுவுமன்றி அவர் இக்கல்லாடத்தின் 'வனப்
புடை யணிச்சம்' என்னும் 98-வது அகவலில்,

"கூடற் பதிவரு மாடற் பரியோன்
எட்டெட் டியற்றிய கட்டமர் சடையோன"

என்று அறுபத்து நான்கு திருவிளையாடலையும் ஒரு
ங்கே தொகுத்தும் குறிப்பிடுகின்றார்; ஆதலின்
புராணம் வடமொழியிலாவது ஏற்பட்ட பின்னரே
இவர் கல்லாட மியற்றினார் என்பது வெளிப்படை.
அநேகமாக வேப்பத்தூரார் திருவிளையாடல்தான்
இவர்க்கு ஆதாரமாக இருந்திருக்க வேண்டும். புலி
முலை புல்வாய்க் கருளியது என்னும் திருவிளையாடல்
அதனின்றுதான் எடுத்துக் குறிப்பிட்டிருப்பார். அது
திருவாசகத்தே "புலிமுலை புல்வாய்க் கருளினை போ
ற்றி" எனக் குறிக்கப்பட்டிருப்பினும் வரலாறு வேப்
பத்தூரார் திருவிளையாடலிற்றான் காணப்படுகின்றது.
வேப்பத்தூரார் வடமொழிப் புராணத்தின் பின் புரா
ணமியற்றினாலும் சங்கத்தைப் பற்றிய விஷயங்களெல்
லாம் அகப்பொருள் முதலியவற்றைப் பார்த்து அதற்
கேற்பவே கூறுகின்றார். கல்லாடர் தொகுத்துச் சுட்
டிய எட்டெட்டுள் திருஞானசம்பந்தர் சம்பந்தமான
பாண்டியன் சுரம் தீர்த்தது, சமணரைக் கழுவேற்றி
யது என்ற இவையும் சேர்ந்தவை; ஆதலின் இவர்

காலம் திருஞானசம்பந்தருடைய காலத்துக்கும பிற் பட்டதாக ஏற்படுகினறமையின இவா சஙககல்லாட ரின வேருயினுா ஒருவா எனபதில தடையெனன?

மாணிக்கவாசகர் சங்கததாா காலததுககு முன் னர் இருநதவா அலலது அவாகளுடன உடனிருநத வா எனறு கொள்ளுதறகு வேறு ஆதாரம ஒனறு மினமையின அவா அககாலததுக்குப பிறபட்டவா என்பதே நிசசயம கலலாடமியறறிய கல்லாடருககு முனகாலத்தவாகளாக ஏழாவது நூறறுண்டின தொ டககததி லிருநத ஞானசம்பந்தராதிய ரியறறிய நூல களிலிருநது நச்சினுர்க்கினியராதிய உரையாசிரியா கள மேறகோ ளொனறும எடாமையின அவாகள ஆறு நூறறுணடில இருநதிருகக வேண்டும எனறு ஏறபடுகினறது. அவாகள மாணிக்கவாசகா இயறறிய வாசகம், கோவைகளி லிருநது மேறகோளகள எடுத திருககினருாகள. பேராசிரியர் உரைமேய இயறறி யிருக்கினறமை மேலே காட்டியுள்ளோம. இவவுரை யாசிரியாகள் இறையனுா அகபபொருளுரையிலிருநது சிலவறறை எடுததாளுகினருாகள். அவ்வகப பொரு ளுரையில மாணிக்கவாசகர் நூல்களிலிருநது மேற கோள்க ளொனறும எடுததாளப் படுவதிலலே. ஆத லின அவ்வகப் பொருளுரை இவவுரை யாசிரியாகளா கிய நச்சினுர்க்கினிய ராதியாகளுடைய காலததிறகு முநதியதாக இருகக வேணடும. அஃது நற்கீரரின உரை யலலவா, அவா சங்கத்தாரில ஒருவரலலவா, எனின; நற்கீரா சஙகததாரில ஒருவருந தலேவருநதான. அவா

அகப்பொருளுக் குரைகண்டதும் உண்மையே அவர்
அகப்பொருட் சூத்திரங்கட்குத் தாம்கண்ட பொரு
ளைத் "தம்மகனார் கீரங்கொற்றனார்க்குரைத்தார்; அவர்
தேனூர்க்கிழார்க் குரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்
குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்
குரைத்தார் ; அவர் மணலூராசிரியர் புளியங்காயப் பெ
ருஞ்சேந்தனார்க் குரைத்தார்; அவர் செல்லூராசிரியர்
ஆண்டைப் பெருங்குமாரனார்க்குரைத்தார் ; அவர் திருக்
குன்றத்தாசிரியர்க்குரைத்தார்; அவர் மாதளவனார் இளநா
கனார்க்குரைத்தார்; அவர் முசிறியாசிரிய நீலகண்டனார்க்
குரைத்தார். இங்ஙனம் வருகின்றதுரை" என்று நீல
கண்டனார் வரை பரம்பரை சொல்லிக்கொண்டே வந்து
நீலகண்டனாருடன் நிகழ்காலத்தால் முடிகின்றமை
யால் இப்போது வழங்கும் உரை நக்கீரர் கண்டவுரை
யைத் தழுவிய கருத்துடையதாக நீலகண்டனாரால் இய
ற்றப்பட்ட உரையே என்று தமிழின் காலம் முதலிய
விஷயமாக அரியவிஷயங்கள் பல எழுதிவரும் உல
கோபகாரியாகிய ஸ்ரீகனகசபைபிள்ளை M. A. அவர்
கள் கருதுகின்றார்கள் அது மிகவும் பொருத்தமான
தாகவே இருக்கின்றது. "அகப்பொருளுரையில் ஆசிரி
யர் உதாரணமாக அநேக செய்யுள்களைப் புதிதாக
இயற்றிச் சேர்த்திருக்கின்றார். அச்செய்யுள்களில் உக
்கிரப் பெருவழுதியின் பெயர் குறியாது வேறொரு
பாண்டியனின் பெயரே குறிக்கப்படுகின்றது. நக்கீரரு
டைய உரையன்றென்பதை அதுவும் வலியுறுத்தும்.
அவ்வரசன் தாம்பாடுங்காலத்து உயிரோடிருக்கின்
றான் என்றும் ஆசிரியர் கூறுகின்றார் அச்செய்யுள

களை அவா அரிகேசரி என்னப்பட்ட நெடுஞ்செழியன் மீது பாடுகினருா. அபபாண்டியன் நெலவேலிக கொடியபோரில ஜெயஙகொண்டான் என்றும அப்போது உயிரோடு சேர சோழபாண்டிய தேசங்களை யாளகினருனெனறும சொலலுகின்றுா. அநநெலவேலிப் போாபல்லவமல்லநந்திவர்மனுடைய சேனுதிபதியாகிய கொலலாபுரத்து உதயசந்திரனுககும பாணடியனுக்கும இடையே நிகழ்நதது என்பது உதயேநதரம (Grant) மானியபூமி சாஸனததால தெரிகினறது. இநதப் பல்லவமல்லவன் மேறகததிய செல்யூக மன்னவனை இரண்டாவது விக்கிரமாதித்தனுடன ஒரேகாலத்தவனுக இருநதவன். இவ்விககிரமாதித்தன் கி. பி. 733ககு 747ககும இடையே ஆண்டவன. ஆதலால அகப்பொருளுரையில குறிககப்பட்ட நெடுஞ்செழியனும அவ்வுரை எழுதிய முசிறியாசிரியர் நீலகண்டனுரும அக்காலததிய (கி. பி. 733கும் 747க்கும இடைப்பட்ட காலததி) யவாகளாகவே இருகக வேண்டும்" என்று ஸ்ரீகனக சபைபிள்ளையவாகள சொல்லுகின்றுர்கள். * ஆதலின் அகப்பொருளுரைக்குப் பிந்திய மாணிச்கவாசசா் காலம எட்டாவது நூற்றுண்டில இருக்கவேண்டும என்னவராதோ எனின் வராது. மாணிக்கவாசகருக்குப் பிநதிய சம்பந்தா் காலமே கி. பி. 610 என்று தக்க ஆதாரங்களால ஏற்பட்டிருக்கும போது அவருக்கு முநதிய மாணிக்சவாசகருக்கு முனனிட்டஅகப பொருளுரையின் காலமகி. பி. 733க்கும் கி. பி. 747

* Madras Review Vol. I Page 129.

க்கும் இடைப்பட்ட காலமாக எப்படி இருக்கும்? ஸ்ரீகனகசபைபிள்ளை யவர்கள் தம கூற்றுக்கு ஆதார மாகக் குறிப்பிட்ட உதயேந்தரம தானசாசனத்தில் * பல்லவமல்லனுடைய சேனாதிபதியாயாகிய உதயசந்தி ரன மூன்றிடத்தில் மூன்று போரில்மூவேறு மன்னர் களை எதிர்த்து ஜெயித்ததாகச சொலலப்படுகின்றது. முதலாவது சபரர்களின் மன்னனை உதயணனோடு செ ய்தபோர். இரண்டாவது நிஷதத்தின் மன்னனை பிருது விஷியாக்கிரனுடன் செய்தபோா. மூன்றுவது பாண் டியனுடன செய்தபோர். இவறறுள பாண்டியனுடன செய்தபோர் மண்ணைக்குக்கிராமத தண்டை நிகழநத தாகவும் அதில அக்காலததில் நாதனுகிய பாணடியன காளிதுர்க்கத்தை இழந்தா னென்றும சொலலபபட்டி ருக்கின்றது. முதறபோர் கிழககுதொடா மலை களை யடுதத இடஙகளில வசித்த சவுராளுடன் † நடந ததுு. இரண்டாவது போர் கொடிய நெலவேலிப் போர். இதில் உதயசந்திரன் சங்கர சேனாதிபதியை எதிர்த்தழித்ததாகச சொலலப்படுகின்றது. ஆதலின் திருநெலவேலியிற் பகைவனை எதிததழித்து ஜெயங கொண்டவனைகச சொல்லப்படுகிற டாணடியன் உதய சந்திரனுக்கு மண்ணைக்குக்கிராமத்திற் றோறறுக கா ளிதுர்க்கத்தை ஒப்புவித்த பாண்டியனின வேறு என பது நிச்சயம். ஆதலின் முசிறியாசிரியர் நீலகண்டனார் காலம் எட்டாவது நூற்றுண்டின் தொடக்கமென

* Salem Dt. Mannual Vol. II, Page 356.

† விசாகப்பட்டணம் முதலிய இடங்களில் வசிப்போர்.

இவ்வுத்யோகதரந தானசாசனததைக் கொண்டு நிச்ச யிததல் ஏலாதெனறேற படுகினறது. ஆகவே நமது மாணிக்கவாசக சுவாமிகள் கி. பி. 610 அளவில இருநத தாகத தெரிகிற ஞானம்பந்தராதியர்ககு முனனிருந்த பேராசிரியா நசசினாககினியா முதலிய உரையாசிரி யாகள் காலததுககு முனனும, கி. பி. 113 அளவில இருநததாகத தெரிகினற நககீராதிய சஙகததாரக குப பினனிடட முசிறியாசிரியர் நீலகண்டனார்ககுப பினனும இருககககூடிய ஒரு காலததவராக இருகக லாம எனபதுதான தறகாலம நாம நிசசயிககக் கூடிய முடிவாக இருககினறது.

முற்றிற்று.

---

டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.